www.TheMagnat.com

குமுதம்

செவ்வாய், வெள்ளி - வாரம் இருமுறை ◆ ரூ.15.00 (தமிழ்நாடு, புதுச்சேரி)

◆ ரூ.17.00 (மற்ற மாநிலங்களில்) ◆ 21.03.2017

# ரிப்போர்ட்டர்

மலர் : 16 இதழ் : 100

நிகழ்காலத்தின் குரல்





## நெருப்பு வளையத்தில் தினகரன்!

## ஜெ. பாணியில் ஸ்டாலின்!

## சசிகலாவுக்கு ஆபத்து?

THE MAGNAT MAGAZINES

www.TheMagnat.com





ஸ்டாலின்

‘நாளிதழ் ஒன்றின் பகுதிநேர நிருபர்; டூ வீலரைத் தவிர அவரிடம் வேறு வாகனங்கள் கிடையாது; சில ஆண்டுகளுக்கு முன்புதான் வழக்கறிஞர் படிப்பை முடித்து பதிவு செய்திருக்கிறார்; ஆர்.கே.நகரில் (கிழக்கு) பகுதிச் செயலாளர் பொறுப்பை அவர் ஏற்றும் சில மாதங்கள்தான் ஆகிறது...’

ஏப்ரல் 12-ம் தேதி இடைத்தேர்தலை எதிர்கொள்ளவிருக்கும் சென்னை ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியின் தி.மு.க. வேட்பாளர் மருதுகணேஷின் பயோ டேட்டா இது! தமிழக அரசியலில் ஒரு சகாப்தமாக கோலோச்சிய ஜெயலலிதாவின் மரணத்திற்குப் பிறகு அவரது இடத்தில் புதிய எம்.எல்.ஏ.வைத் தேர்வு செய்யும் தேர்தலில் இப்படி ஒரு சாமானிய கட்சிக்காரரை தி.மு.க. இறக்கியிருப்பது ஆச்சரியம்!

வழக்கமாக தி.மு.க.வின் வேட்பாளர்

www.TheMagnat.com

## ஆர்.கே.நகர் குஸ்தி...

# ஜெ. பாணியில் ஸ்டாலின்...

www.TheMagnat.com

# 'பல்ஸ்' பார்த்து இறங்கிய தினகரன்!

செல்வராஜ்

> டி.டி.வி. தினகரனுக்கு இது கௌரவ பிரச்னை! அவரது குடும்பத்தினர் மீதான அவதூறு பழியை துடைக்கும் வாய்ப்பாக இந்தத் தேர்தல் களத்தைப் பயன்படுத்த விரும்புகிறார் அவர்.

நேர்காணலில் முதல் கேள்வியே, 'எத்தனை கோடி செலவு செய்வாய்?' என்பதாக இருக்கும். அடுத்து, 'அந்த ஏரியாவின் மெஜாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவரா?' என்கிற கேள்வி தவறாமல் இடம் பெறும். மார்ச் 14-ம் தேதி அறிவாலயத்தில் நடந்த நேர்காணலில் மேற்படி இரு கேள்விகளிலும் மருதுகணேஷ் தேர்ச்சி பெறவில்லை. அதன் பிறகும் அவரை எப்படி வேட்பாளராக தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் தேர்வு செய்தார்?

ஆர்.கே.நகர் அ.தி.மு.க. வேட்பாளராக அந்தக் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் டிடி.வி.தினகரன் களமிறங்குவதாக மார்ச் 15-ம் தேதி காலை 10 மணிக்கு அறிவிக்கப்பட்டது. அதைத் தெரிந்துகொண்டே அடுத்த 5-வது நிமிடத்தில் திமுக. வேட்பாளராக மருதுகணேஷை, பேராசிரியர் அன்பழகன் அறிவித்தார். வழக்கமாக தினகரன் வெளியிடும் அறிக்கைகளுக்கு கீழ்மட்ட நிர்வாகிகள் மூலமாக பதில் கொடுத்து சீண்டுவது ஸ்டாலின் ஸ்டைல்! அதே வித்தையை வேட்பாளர் தேர்விலும் ஸ்டாலின் காட்டிவிட்டதாக ஒரு தரப்பினர் கூறுகிறார்கள்.

ஏற்கனவே இந்த தொகுதியில் ஜெயலலிதாவை எதிர்த்து போட்டியிட்ட சிம்லா முத்துச்சோழன், 'ஒரு சி' செலவு செய்ய தயாராக இருப்பதாகக் கூறியிருந்தாராம். இதே தொகுதியில் வசிப்பவரான மறைந்த தலைவர் காமராஜரின் தங்கை வழிப் பேத்தி மயூரியும் '2 சி வரை ஓகே!' என்றாராம்.

இவர்களில் மயூரியைத் தேர்வு செய்ய ஸ்டாலின் தயாராக இருந்ததாகவும் ஆனால், சிம்லாவுக்கு ஆதரவாக வேறு சில வட்டாரங்களில் இருந்து அழுத்தம் வந்ததாகவும் சொல்கிறார்கள். அதன்பிறகே சட்டென ஆர்.கே. நகர் தொகுதியின் இரு பகுதி செயலாளர்களில் ஒருவரான மருதுகணேஷை 'டிக்' செய்தாராம் ஸ்டாலின்.

"முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலிலும்கூட அடிமட்ட நிர்வாகி ஒருவரை நிறுத்தி, ஜெயிக்க வைப்பது ஜெயலலிதாவின் ஸ்டைல்! அதையே இந்த முறை ஸ்டாலின் கையில் எடுத்திருக்கிறார். கட்சித் தொண்டர்களுக்கு இதில் மகிழ்ச்சிதான்!" என திமுகவில் சிலர் பூரிக்கிறார்கள்.

ஆனால் வேறு



தினகரன்

www.TheMagnat.com

சிலரோ, 'ஜெயலலிதாவின் தடாலடி நடவடிக்கைகளுக்கு பயந்து, யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் அ.தி.மு.க.வினர் வேலை செய்தார்கள். தி.மு.க.வில் அது சாத்தியமாகாது. தவிர, தினகரன் மற்றும் தீபா என வி.ஐ.பி. வேட்பாளர்களுக்கு மத்தியில் தி.மு.க.வும் முகமறிந்த ஒரு பிரபலத்தையே நிறுத்தியிருக்க வேண்டும்!' என்கிறார்கள்.

மருதுகணேஷை வேட்பாளராக அறிவித்ததும், "ஏன் இப்படி டம்மி வேட்பாளரை தளபதி போட்டிருக்கார்?" என்பதுதான் தி.மு.க. நிர்வாகிகள் பலரது முதல் ரியாக்ஷன்! அவர்களே தொடர்ந்து, "டி.டி.வி.தினகரனுக்கு இது கௌரவ பிரச்னை! அவரது குடும்பத்தினர் மீதான அவதூறு பழியை துடைக்கும் வாய்ப்பாக இந்தத் தேர்தல் களத்தைப் பயன்படுத்த விரும்புகிறார் அவர். எனவே தேர்தல் வெற்றிக்காக எந்த அஸ்திரத்தையும் பயன்படுத்த அவர் தயங்க மாட்டார்.

ஆனால், எங்களது வேட்பாளர் மருதுகணேஷ், ஐம்பதாயிரம் ரூபாய் செலவு செய்து ஒரு பொதுக்கூட்டம் நடத்தவே தடுமாறக் கூடியவர்! கட்டிய வேஷ்டியும் கரைபோட்ட துண்டுமாக பிரசார களத்தில் வந்து நிற்பதை தவிர அவருக்கு வேறு வழி இல்லை. ஆர்.கே.நகரை உள்ளடக்கிய சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மாதவரம் சுதர்சனமும் பெரிதாக செலவு செய்யக் கூடியவர் இல்லை.

இதர மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் பலரும் ஸ்டாலினின் நமக்கு நாமே ஏற்பாடுகள், 2016 சட்டமன்றத் தேர்தல் செலவு, அதைத் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள், அண்மையில் ஸ்டாலின் பிறந்த நாள் விழா ஏற்பாடுகள் என தொடர் செலவுகளால் நொடிந்து போயிருக்கிறார்கள்.

எனவே, தலைமையே தனது கஜானாவை திறந்து விட்டால்தான் உண்டு. அதைச் செய்யாத பட்சத்தில், 2016 பொதுத்தேர்தலில் அதீத நம்பிக்கையால் வீழ்ந்த கதிதான் இந்த இடைத்தேர்தலிலும் ஏற்படும்!" என்கிறார்கள்.



மருதுகணேஷ்

**கடலில் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாய் வழங்கியதில் அரசு மீது திருப்தியுடன் இருக்கிறார்கள்.**

மருதுகணேஷுக்கு முன்பாக இந்த ஏரியாவின் தி.மு.க. பகுதி செயலாளராக இருந்தவர் சுந்தர்ராஜன்! கடந்த சட்டமன்ற பொதுத்தேர்தலில் அவர் சரியான முறையில் தேர்தல் பணியாற்றவில்லை என சிம்லா அளித்த புகாரின் பேரில் அவரிடம் இருந்து கட்சிப் பதவி பறிக்கப்பட்டதாம்! அந்த சுந்தர்ராஜனும் அவருடன் இணைந்த மூன்று வட்ட செயலாளர்களும் இன்று வரை தி.மு.க. தலைமை மீது அதிருப்தியிலேயே இருக்கிறார்களாம்.

அவர்களை அ.தி.மு.க. பயன்படுத்திக் கொள்ள போகிறதா? அல்லது ஸ்டாலின் 'கூல்' செய்து விடுவாரா? என்பது வருகிற நாட்களில் தெரியும். இதற்கிடையே, 'இப்படி சீட் கொடுத்து செலவையும் தலைமையே கவனிப்பதாக இருந்தால், அந்த வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கலாமே?' என தி.மு.க. வழக்கறிஞர் அணி மற்றும் இளைஞர் அணி முக்கிய நிர்வாகிகள் சிலர் ஏகமாக புழுங்குகிறார்கள். இதுவும் தி.மு.க.வின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கலாம் எனவும் தகவல்!

தி.மு.க.வில் சாமானிய நிர்வாகி களம் இறக்கப்பட்டது ஆச்சரியம் என்றால், அ.தி.மு.க. சார்பில் இந்த சூழலில் டி.டி.வி.தினகரன் வேட்பாளராக முன்வந்ததும் ஆச்சரியம்தான்! தி.மு.க.வும் ஓ.பி.எஸ். அணியும் ஜெ. மரணத்துடன் சசிகலாவை சம்பந்தப்படுத்தும் பிரசாரத்தை இன்னும் நிறுத்தவில்லை. தமிழகம் முழுக்க சாலையோரம் ஒரு இடத்தில்கூட சசிகலா உருவம் பொறித்த போஸ்டரை இவர்கள் விட்டு வைப்பதில்லை.

www.TheMagnat.com

அதிமுக போஸ்டரில் எத்தனை படங்கள் இருந்தாலும், சசிகலா படத்தை மட்டும் துண்டாக வெட்டிவிடுவதை ஒரு இயக்கமாகவே எதிர்க்கட்சியினர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் சில மாவட்டங்களில் சசிகலா படத்துடன் போஸ்டர் அடிப்பதை அதிமுகவினரே தவிர்க்கும் சூழல் இருக்கிறது. ஆர்.கே.நகரிலும் இதே பிரசாரத்தை எதிர்க்கட்சிகள் முன்னிலைப்படுத்தும் எனத் தெரிந்தும், அதை சவாலாக ஏற்று தினகரன் களம் இறங்குவதுதான் வியப்புக்குரியது!

இதுகுறித்து தினகரனுக்கு நெருக்கமான வட்டாரங்களில் பேசியபோது, "ஜெ. மரணம் தொடர்பாக சசிகலா மீது சுமத்தப்படும் பழியை துடைத்தெறிவதில்தான் அ.தி.மு.க.வின் எதிர்காலம் இருக்கிறது. அதையும் உடனடியாக செய்தாக வேண்டும் என தினகரன் விரும்புகிறார். ஆர்.கே.நகரில் அவர் போட்டியிடும் நோக்கமே அதுதான். ஜெயலலிதாவின் தொகுதி மக்களே தினகரனுக்கு வாக்களித்து ஜெயிக்க வைத்துவிட்டால், அதன்பிறகு வேறு யாரிடமும் சசிகலா குடும்பத்தினர் 'சர்டிபிகேட்' வாங்க வேண்டிய அவசியம் இருக்காது" என்கிறார்கள் அவர்கள்.

'ஒருவேளை ஆர்.கே. நகர் தேர்தல் முடிவு எதிராக அமைந்துவிட்டால்...?' என அவர்களிடமே கேட்டோம். அதற்கு அவர்கள், "அதிமுகவின் சின்னத்திற்கு மட்டுமே ஆர்.கே. நகரில் குறைந்தபட்சம் பத்தாயிரம் வாக்குகள் உண்டு. தவிர, அண்மையில் கடலில் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட இந்த ஏரியா மீனவக் குடும்பங்களுக்கு தாமதமின்றி தலா 5,000 ரூபாய் வழங்கியதில் இந்த அரசு மீது அவர்களும் திருப்தியுடன் இருக்கிறார்கள்.

எனவே, குறைந்தபட்சம் இருபதாயிரம் வாக்குகளை கையில் வைத்துக்கொண்டுதான் தினகரன் களத்தில் இறங்குகிறார். தவிர, ஏற்கனவே 1999, 2004-ம் ஆண்டுகளில் பெரியகுளம் எம்பி. தொகுதியில் தேர்தல் உத்திகளை அரங்கேற்றி அனுபவம் பெற்றவர்தான் அவர். 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அமைத்த மெகா கூட்டணியால், தமிழகத்தின் அத்தனை தொகுதிகளிலும் அ.தி.மு.க. அணி மோசமாக தோற்றது.

ஆனால், பெரியகுளத்தில் மட்டும் காங்கிரஸ் வேட்பாளர் ஆரூணுக்கு 'டப் பைட்' கொடுத்த தினகரன், 21,000 வாக்குகள் வித்தியாசத்தில்தான் தோற்றார். பெரியகுளத்தில் 1999-ல் வென்ற அனுபவமும் 2004-ல் தோற்ற அனுபவமும் இப்போது அவருக்கு உதவியாக இருக்கும்!" என்றார்கள்.



சிம்லா முத்துச்சோழன்



மயூரி

இன்னமும் ஓ.பி.எஸ். அணி, தேமுதிக, மக்கள் நலக் கூட்டணி, பா.ஜ.க. ஆகியவை பிரிக்கும் வாக்குகள் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். "1996-ல் பர்கூரில் ஜெயலலிதாவை எதிர்த்து, ஒரு சாதாரண நிர்வாகியான சுகவனத்தை நிறுத்தி தி.மு.க. ஜெயித்தது. அதே அதிர்ச்சியை அ.தி.மு.க.வுக்கு இந்த முறை வழங்குவோம்!" என்கிறார்கள் தி.மு.கவினர்.

அ.தி.மு.க. தரப்போ, "தினகரனின் நேரடி கண்காணிப்பில் அண்மையில் ஒரு குழுவினர் ஆர்.கே.நகரில் முழுமையாக ஆய்வு செய்து மக்களின் மனநிலையை துல்லியமாக அறிந்து வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்வதுபோல ஆளும்கட்சிக்கு எதிரான மனநிலை எதுவும் அங்கு இல்லை.

அம்மாவின் ஆட்சி தொடர வேண்டும். அம்மாவின் இயக்கம் ஜெயிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் விருப்பமாக இருக்கிறது. இந்த 'பல்ஸை' தெரிந்துகொண்டுதான் தினகரன் தைரியமாக களம் இறங்குகிறார். எனவே தேர்தல் களத்தில், முழு வேகத்தில் மோதி ஜெயிப்போம்!' என்கிறார்கள், நம்பிக்கையாக!

அக்னி சூட்டில் தகதகக்க ஆரம்பித்துவிட்டது ஆர்.கே.நகர்!

**படங்கள்: ம.செந்தில்நாதன், கணேஷ்**

www.TheMagnat.com





# லக்னோ சிறையில் சென்னை டாக்டர்!

சென்னையிலுள்ள 'மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி'யில் முடநீக்கியல் துறை பேராசிரியராக இருப்பவர் டாக்டர் சுதீர். தனது சொந்த தேவைக்காக கந்துவட்டி கும்பலிடம் பணம் வாங்கியுள்ளார். அவரிடம், அசல் பிளஸ் வட்டியையும் தாண்டி பணம் கேட்டு மிரட்டியுள்ளது அக்கும்பல். ஒரு கட்டத்தில் அவர் பணம் தர மறுக்கவே, தங்களது உ.பி. தொடர்புகளைப் பயன்படுத்தி மோசடி வழக்கில் லக்னோ சிறையில் அடைத்துள்ளது கந்துவட்டி கும்பல்!

டாக்டருக்கே இந்த நிலைமையா? என்று வெகுண்டெழுந்த மருத்துவ சமூகம், தற்போது போராட்ட களத்தில் குதித்துள்ளது. இவ்வழக்கு சூடுபிடிக்க காரணமான தேனாம்பேட்டை காவல்துறை அதிகாரிகளிடம் பேசினோம்.

"2011-ல் டாக்டர் சுதீர் சொந்தமாக ஒரு மருத்துவமனை கட்டியுள்ளார். இதற்கு 20 லட்ச ரூபாய் அவசரமாக தேவைப்பட்டதால் கந்துவட்டி பிசினஸ் செய்யும் புரசைவாக்கத்தை சேர்ந்த காமராஜ் ஜெயின் என்பவரை அணுகியுள்ளார். மாதம் 5 சதவிகிதம் வட்டி, அதில் இரண்டு சதவிகிதத்தை வங்கியில் செலுத்த வேண்டும். மீதமுள்ள மூன்று சதவிகிதத்தை ரொக்கமாக கொடுத்துவிட வேண்டும் என்பது நிபந்தனை.

இதற்கு சூரிட்டியாக சுதீரின் மூன்று வங்கிக் கணக்குகளில் இருந்து தலா இரண்டு செக் வீதம் மொத்தம் 6 பிளாங் செக், 4 பிராமிசரி நோட்டுகள், 2 பூர்த்தி

www.TheMagnat.com

செய்யப்படாத கிரீன் ஷீட்டுகளையும் வாங்கி வைத்துக் கொண்டு 20 லட்ச ரூபாயைக் கொடுத்துள்ளார் காமராஜ் ஜெயின். டாக்டர் சுதீர் இயல்பிலேயே மிகவும் அமைதியானவர் என்பதால், அதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட காமராஜ், அசல் மற்றும் வட்டி போக அதிகமாக பணம் கேட்டுள்ளார். பொறுத்துப் பார்த்த சுதீர், ஒரு கட்டத்தில் இதற்கு மேல் பணம் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்.



காமராஜ் ஜெயின்

# மார்வாடி வில்லன் நடத்திய கொடூரம்

சுந்தர்

இதனால் ஆத்திரமடைந்த காமராஜ், அடியாட்களோடு சுதீரின் ஆழ்வார்பேட்டை வீட்டிற்குள் புகுந்து, 'ஒழுங்கு மரியாதையா நான் கேட்கிற பணத்தைக் கொடுக்கல, குடும்பத்தோடு நீ வாழவே முடியாது, அழிச்சுடுவேன்!' என்று மிரட்டியுள்ளார். இதனால் அரண்டு போன சுதீர், இதுகுறித்து தேனாம்பேட்டை போலீசில் புகார் கொடுத்தார்.

காமராஜ் மீது ஏற்கனவே, 2014-ல் அதிக வட்டி கேட்டு கொடுமைப்படுத்துவதாக டெல்லிராஜ் என்பவர் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப் பதிந்து காமராஜை கைது செய்துள்ளனர். பிறகு டெல்லிராஜோடு சமாதானமாகி அந்த வழக்கிலிருந்து தப்பித்தார் காமராஜ். இந்த நிலையில், தற்போது சுதீர் அளித்த புகாரால் எங்கே தான் மீண்டும் கம்பி எண்ண நேரிடுமோ என்று அஞ்சிய காமராஜ், அதற்கு முன்பு தான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று திட்டம் போட்டார்.

காமராஜ், ஜெயின் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவருக்கு சௌகார்பேட்டை மார்வாடிகளின் தொடர்பு அதிகம். இதைப் பயன்படுத்தி சுதீரிடமிருந்து பணத்தைக் கறக்க திட்டம் தீட்டிய காமராஜ், தனது மார்வாடி நண்பர்களான லக்னோவில் அமான் என்டர்பிரைசஸ் நடத்தி வரும் சர்பிராஸ் அகமது மற்றும் பியூஸ் மிஸ்ரா ஆகியோரின் உதவியை நாடினார்.

பிறகு, சுதீரிடமிருந்து வாங்கப்பட்ட காலி பிராமிசரி நோட்டில், மருத்துவக் கல்லூரி உரிமம் பெறுவதற்காக சுதீரிடம் ஒரு கோடி ரூபாய் சர்பிராஸ் அகமது கொடுத்தது போலவும், அதை சுதீர் பெற்றுக் கொண்டது போலவும் எழுதினர். அதேபோல, பிளாங் செக்குகளில் 70 லட்சம், 30 லட்சம் என்று பூர்த்தி செய்து அதை லக்னோவிலுள்ள சர்பிராஸின் வங்கியில் போட்டு பவுன்ஸ் ஆகச் செய்தனர்.

இதையடுத்து, இந்திய மருத்துவக் கவுன்சிலில் தனது தொடர்புகளைப் பயன்படுத்தி, மருத்துவக் கல்லூரிக்கு உரிமம் வாங்கித் தருவதாகக் கூறி, சுதீர் ஒரு கோடி ரூபாய் பெற்றுக் கொண்டு ஏமாற்றி விட்டதாக அலிகஞ்ச் காவல் நிலையத்தில் மோசடி புகார் கொடுத்தனர். பிறகு, சென்னைக்கு வந்த அலிகஞ்ச் போலீசார் கடந்த 24-ம் தேதி சுதீரை கைது செய்து அழைத்து சென்றனர்.

இதுகுறித்து சுதீர் குடும்பத்தினர் அளித்த புகாரின் பேரில், காமராஜை கைது செய்து

www.TheMagnat.com



⏭ சுதீருக்கு ஆதரவாக டாக்டர்கள் போராட்டம்...



⏭ அகிலேஷுடன் காமராஜ் ஜெயின்

விசாரித்தோம். முதலில் மறுத்தவர், சர்பிராஸ் அகமதுவிடம் அவர் தொடர்பில் இருந்ததற்காக ஆதாரத்தைக் காட்டியவுடன் குற்றத்தை ஒப்பு கொண்டார். தற்போது 20 நாட்களுக்கும் மேலாக உபி. சிறையில் வாடுகிறார் சுதீர். அவரை மீட்பதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது!" என்றனர்.

உ.பி.யில் சுதீரை ஜாமீனில் எடுப்பதற்காக சென்றுள்ள அவரது மைத்துனர் பிரீஜித் சிங்கிடம் பேசினோம். ''அலிகஞ்ச் போலீசார் சுதீரை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 'டிரான்ஸிட் ரிமாண்ட்' எடுத்து விமானத்தில் டெல்லிக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கிருந்து 25-ம் தேதி லக்னோவுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு சர்பிராஸ் அகமதுவின் பண்ணை வீட்டில் சுமார் 10 மணி நேரம் அடைத்து வைத்து பணம் கேட்டு தாக்கியதோடு, சுதீரின் மனைவி காயத்ரி தேவியையும் தொடர்பு கொண்டு மிரட்டியுள்ளனர். அவர்கள் மசியாததால் 26-ம் தேதி மாலை நீதிமன்றத்தில் சுதீரை ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளார்கள்!" என்றார்.

சர்பிராஸ் அகமது மற்றும் பியூஸ் மிஸ்ரா இருவரும் உபி. மாஜி முதல்வர் அகிலேஷ் யாதவிற்கு மிகவும் நெருக்கமானவர்களாம். இந்த நெருக்கத்தை பயன்படுத்தி உபியில் தனி சாம்ராஜ்ஜியமே நடத்தி



⏭ அகிலேஷுடன் சர்பிராஸ் அகமது

வருகின்றனராம். ஜெயலலிதா மறைவுக்கு அஞ்சலி செலுத்த அகிலேஷ் யாதவ் சென்னை வந்தபோது, அவருக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அருகே இருந்து கவனித்தது இந்த காமராஜ்தான் என்கிறார்கள்.

அரசியல் தொடர்புகளைப் பயன்படுத்தி உ.பி., பீகார் என்று கொள்ளை அடித்து வந்த இந்த கும்பல், தற்போது தமிழகத்திலும் நுழைந்துள்ளது. இவர்களுக்கும் அகிலேஷுக்கும் என்ன தொடர்பு? இதைப் பயன்படுத்தி கொண்டு எத்தனை அப்பாவிகளை இப்படி ஏமாற்றி சிறையில் அடைத்தார்கள்? என்பதெல்லாம் தீர விசாரித்தால் பூதாகரமாக வெடிக்கும் என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள்.

தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்க தலைவர் பாலகிருஷ்ணனிடம் கேட்டபோது, "அரசு மருத்துவருக்கே இந்த கதி ஏற்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. ஒரு பொய்யான குற்றச்சாட்டை புனைந்து, சுதீரை சிறையில் அடைத்துள்ளனர். திரைப்படத்தில் பார்ப்பதை போல எங்கெங்கோ திட்டமிட்டு இக்காரியத்தை நடத்தியுள்ளார்கள். சுதீருக்கு ஆதரவாக அரசு மருத்துவர்கள் சங்கம் நிற்கும்!" என்றார்.

தமிழகத்தில் கந்துவட்டி, கட்ட பஞ்சாயத்துகள் தடை செய்யப்பட்டிருக்கும் நிலையில், இதுபோன்ற கும்பல் துணிச்சலாக அதே தொழிலை மீண்டும் தொடர்ந்து வருவது எப்படி என்பதுதான் தெரியவில்லை. சுதீரைப் போன்று இன்னும் எத்தனை பேர் இக்கும்பலால் சிறைகளில் வாடுகிறார்கள் என்பதும் தெரியவில்லை.

முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டிய விஷச்செடி இது. காவல்துறை சாட்டையை சொடுக்கினால் தான் இக்கும்பலின் கொட்டத்தை அடக்க முடியும்.

**படங்கள்: முத்து கணேஷ்**

www.TheMagnat.com

7 தலைமுறைகள் கொண்ட ஒரே நிறுவனம்

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை



Dr.சிவராஜ்

## சென்னை கிளை ஆபிஸ்

தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை
New No.10/4 வீரபத்திரன் தெரு,
வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில்,
நுங்கம்பாக்கம், சென்னை-34.
**Ph: 044 - 28230072, 28236780.**

## ஈரோடு கிளை ஆபிஸ்

தினசரி காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில்,
கோவை மெடிக்கல் ரோடு வழியாக,
33, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
**Ph: 0424-2259332.**



Dr.சிவராஜ் சிவகுமார்

**ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)**

**திருச்சி** – 1-ம் 9-ம் தேதியும் காலை 6 to மாலை 5, ஹோட்டல் ஆஸ்பி, ஜங்ஷன் ரோடு, திருவள்ளுவர் பஸ் நிலையம் அருகில்

**தஞ்சை** – 2-ம் தேதி காலை 6 to 12, அசோக் லாட்ஜ், ஆபிரகாம் பண்டிதர் ரோடு, சாந்தி தியேட்டர் ரோடு

**கும்பகோணம்** – 2-ம் தேதி மதியம் 2 to 5, ஹோட்டல் அருள், ஜான் செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில்

**விழுப்புரம்** – 3-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் ஆதித்யா, புதிய பஸ் நிலையம் எதிரில், Opp.தேர் விநாயகர் கோவில், K.K நகர்

**கள்ளக்குறிச்சி** – 3-ம் தேதி மதியம் 2 to 5, AKT லாட்ஜ், பஸ் நிலையம் அருகில்.

**நாகர்கோவில்** – 2-ம் தேதி காலை 6 to 5, ஹோட்டல் கங்கா பேலஸ், K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்

**நெல்லை** – 3 & 23-ம் தேதி காலை 6 to 5, பரணி லாட்ஜ், பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு

**மதுரை** – 4-ம் 22-ம் தேதியும் காலை 6 to மாலை 5, காலேஜ் ஹவுஸ், டவுன் ஹால் ரோடு

**திருப்பூர்** – 1-ம் 14-ம் தேதியும் காலை 6 to 12, S A P ரெசிடென்சி, 11, முனிசிபல் ஆபீஸ் ரோடு

**ஓசூர்** – 6-ம் 16-ம் தேதியும் காலை 6 to மாலை 5, ஹோட்டல் தனஞ்செயா, சீனிவாச காம்ப்ளக்ஸ், பாகலூர் ரோடு

**மார்த்தாண்டம்** – 6-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் ஜெயாதி, R.C வீதி, நந்தன் ரோடு, புதிய பஸ் நிலையம் அருகில்

**தென்காசி** – 7-ம் தேதி காலை 6 to 12, கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம், மேல ஆவணி மூல வீதி, பழைய பஸ் நிலையம் அருகில்.

**இராஜபாளையம்** – 7-ம் தேதி மதியம் 2 to 5, ஹோட்டல் ஆனந்தாஸ், 295-A, தென்காசி ரோடு, பழைய பஸ்நிலையம் அருகில்.

**தேனி** – 8-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் தேனி இன்டர்நேஷனல், பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**பழனி** – 8-ம் தேதி மதியம் 2 to 5, ஹோட்டல் தீபம், பஸ் நிலையம் அருகில், அரசு மருத்துவமனை எதிரில்

**வேலூர்** – 11-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ், 3, தென்னைமரம் தெரு

**கோவை** – 13-ம் 26-ம் தேதியும் காலை 6 to 5, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ், லட்சுமி தியேட்டர் அருகில், ராஜவீதி

**கடலூர்** – 11-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் CAR லாட்ஜ், 62, லாரன்ஸ் ரோடு

**சிதம்பரம்** – 11-ம் தேதி மதியம் 2 to 5, MAT லாட்ஜ், 24, S.P. கோயில்

**மாயவரம்** – 12-ம் தேதி காலை 6 to 12, கோல்டன் டவர், பஸ் நிலையம் எதிரில்

**நாகப்பட்டிணம்** – 12-ம் தேதி மதியம் 2 to 5, பூம்புகார் லாட்ஜ், புதிய பஸ் நிலையம் எதிரில்

**மன்னார்குடி** – 13-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் காவேரி லாட்ஜ், புதிய பஸ் நிலையம் அருகில்

**புதுக்கோட்டை** – 13-ம் தேதி மதியம் 2 to 5, ஹோட்டல் [illegible], புதிய பஸ் நிலையம் எதிரில்

**கரூர்** – 14-ம் தேதி காலை 6 to 12, ஆர்த்தி ஹோட்டல், [illegible], பஸ் நிலையம் அருகில்

**கிருஷ்ணகிரி** – 20-ம் தேதி காலை 6 to 12, ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ், 238, [illegible] ரோடு

**திருப்பத்தூர்** – 20-ம் தேதி மதியம் 2 to 5, அக்தர் லாட்ஜ், 36, திருவண்ணாமலை ரோடு, [illegible]

**ஆரணி** – 21-ம் தேதி காலை 6 to 12, கன்யா லாட்ஜ், பெரிய கடை வீதி

**திருவண்ணாமலை** – 21-ம் தேதி மதியம் 2 to 5, ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி

**திண்டுக்கல்** – 24-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் ஐஸ்வர்யா, ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில்

**சாத்தூர்** – 25-ம் தேதி காலை 6 to 12, ஜெய்ப்ரியா வெஜ் ரெஸ்டாரண்ட், 348 / A9, வெம்பக்கோட்டை ரோடு

**தூத்துக்குடி** – 25-ம் தேதி மதியம் 2 to 5, ஹோட்டல் சீதா இன்டர்நேஷனல், 1/9, போல்பேட்டை, புதிய பஸ் நிலையம் அருகில்

**இராமநாதபுரம்** – 26-ம் தேதி காலை 6 to 12, ஹோட்டல் ராஜா பேலஸ், சந்தை வீதி, நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில்

**காரைக்குடி** – 27-ம் தேதி, காலை 6 to 12, ஹோட்டல் ஜெகன், புதிய பஸ்நிலையம் எதிரில்.

**பொள்ளாச்சி** – 27-ம் தேதி, காலை 6 to 12, சக்தி ஹோட்டல், 144, கோவை ரோடு

**மேட்டுப்பாளையம்** – 27-ம் தேதி, மதியம் 2 to 5, ஹோட்டல் காவேரி, K.G.C. காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு

கண் எரிச்சல் – உடலில் அதிக உஷ்ணம் – தூக்கமின்மை – சோர்வு – களைப்பு – மேல்மூச்சு – ஞாபக மறதி – வீண் எண்ணங்கள் – மனக்குழப்பம் – சந்தேகங்கள் – பயம் – நடுக்கம் – உடல்வலி – முகம் ஒட்டிப்போதல் – கண்களைச் சுற்றி கருவளையம் ஏற்படுதல் – மலச்சிக்கல் – அடிக்கடி ஜலதோஷம் – கல்யாணம் செய்ய பயம் சிலர் கல்யாணம் ஆகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை (கர்ப்ப அணுக்கள்) இல்லாமலிருப்பது – சிலருக்கு மணமாகியும் குழந்தை இல்லை – குறை பிரசவம் இவை அனைத்தும் உடலின் தளர்ச்சியினால் ஏற்படுகின்றது. நரம்பு தளர்ச்சி, பாலினகுறைபாடு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**சிகிச்சை விபரம் :** சிவராஜ் ரூ.15,000/-, SSV செட் ரூ.7,500/-, SSS செட் ரூ.5,000/-, Spl. ரூ.3,000/-, A1 ரூ.2,000/-, B1 ரூ.1,000/-

வெளிநாட்டில் உள்ளவர்கள் : சிவராஜ் ரூ. 15,000/-, SSV செட் ரூ.7,500/-, SSS செட் ரூ.5,000/-

பணம் அனுப்புவது பற்றி : UAE Exchange, Western Union Money Transfer என்பதில் எந்த பெயருக்கு பணம் அனுப்ப வேண்டும் என்பதை Phone செய்து அறிந்து கொள்ளவும். பணம் அனுப்புவிட்டு அவர்கள் தரும் Control நம்பரை Phone மூலம் Dr க்கு தெரியப்படுத்தவும்.










## சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

E-mail: sales@sivarajsiddha.com
Web : www.sivarajsiddha.com
அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் - 7. Ph: 0427-2419782. **M : 98427 13500, 98427 39500.**

www.TheMagnat.com







ராஜராகவன்

# எம்.எல்.ஏ.வை அமைச்சராக்க பெண்

இரண்டு அடுக்கு மாடி கொண்ட 20 ஆயிரம் ரூபாய் வாடகை வீட்டில் மனைவியுடன் குடித்தனம் நடத்தாமல் மனித சடலம் மற்றும் மண்டையோடுகளை வைத்து மாந்திரீக பூஜை, நிர்வாண பூஜை செய்து திகில் கிளப்பி இருக்கிறான் ஒரு வில்லங்க மந்திரவாதி. தம்பதி சமேதராக கைதாகி பெரும் பரபரப்பைக் கிளப்பிய இந்த விவகாரத்தில், சினிமா பிரபலங்களும் அரசியல்வாதிகளும் சிக்குவார்கள் என்று தெரிகிறது.

மார்ச் 10-ம் தேதி இரவு பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் பின்புறமுள்ள எம்.எம். நகரில் உள்ள ஒரு வீட்டிற்குள் நுழைந்து சோதனையிட்ட பெரம்பலூர் போலீசாருக்கு அதிர்ச்சி. அழுகிய இளம்பெண்ணின் சடலம் மற்றும் குவியல் குவியலாக மண்டை ஓடுகள் இருக்க... பில்லி, சூனியம் மற்றும் மாந்திரீகம் செய்வதற்காக நரபலி கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்துடன் கார்த்திகேயன் என்கிற ராஜராகவன் மற்றும் அவனின் மனைவி நசிமா (எ) தீபிகாவையும் கைது செய்த போலீசார் தீவிர விசாரணையில் இறங்கினர்.

பில்லி, சூனியம் மற்றும் இறந்தவர்களின் ஆவிகளுடன் உறவினர்களைப் பேச வைப்பதற்காகவே அந்த பெண்ணின் சடலத்தை, சென்னையிலுள்ள நண்பர் வினோத்குமார் மூலம் பெற்றதாக ராஜராகவன் கூறினான். அதையடுத்து வினோத்குமார், கார் டிரைவர் சதீஷ் மற்றும் மயிலாப்பூர் மயான ஊழியர்களான தன்ராஜ், கார்த்திக் ஆகியோரையும் போலீசார் கைது செய்து பெரம்பலூர் அழைத்து வந்தனர்.

இவர்களிடம் நடத்திய விசாரணையில் அந்த பெண், தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சென்னை

www.TheMagnat.com

நவீன் இளங்கோவன்

# சடல பூஜை?

## பெரம்பலூர் மந்திரவாதி பகீர்



தேனாம்பேட்டையை சேர்ந்த அபிராமி என்பதும், மயிலாப்பூர் சுடுகாட்டில் இருந்து தோண்டியெடுத்து வந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து, அபிராமியின் பெற்றோரை பெரம்பலூருக்கு வரவழைத்த போலீசார், அவர்களிடம் 'அது அபிராமிதானா!' என்பதை உறுதிசெய்து கொண்டு, பின் பெரம்பலூரிலேயே பெண்ணின் சடலத்தை தகனம் செய்தனர். இவ்வழக்கில் பல திகில் கதைகள் இருப்பதால், அதை தோண்டப் போய் தமக்குத் தேவையில்லாத தலைவலி வந்துசேரும் என நினைத்து போலீசார் வழக்கை துரித கதியில் முடிக்க திட்டமிட்டிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த வில்லங்க விவகாரம் பற்றி 'பெண் சடலத்தின் மேல் அமர்ந்து பூஜை.. தலைச்சன் பிள்ளை மண்டையோட்டு மை! வில்லங்க மந்திரவாதி' என்ற தலைப்பில் கடந்த 17.3.2017 ரிப்போர்ட்டர் இதழில் செய்தி வெளியிட்டிருந்தோம். இந்த விவகாரத்தில் கூடுதல் தகவல்கள் என்ன? யார் யாருக்குத் தொடர்பு இருக்கலாம்? கைப்பற்றப்பட்ட ஹார்டு டிஸ்க்கில் ஏதேனும் ஆதாரம் சிக்கியதா? என்ற பல்வேறு கேள்விகளுடன் விஷயமறிந்த காக்கி ஒருவரிடம் பேச்சு கொடுத்தோம்.

“பெரம்பலூர் நாரணமங்கலம் அருகே மருதடியில் பல கோடி மதிப்பிலான இடத்தை வளைத்துப் போட்டு, நாணல் புல்லால் குடில் அமைத்து மாந்திரீக வேலைகளைச் செய்து வந்தான். அதுவரை கார்த்திகேயன் என்ற பெயரில்தான் இருந்தான். இந்நிலையில், 2016-ம் ஆண்டு அந்த குடில் அருகே அக்கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் கிரிக்கெட் விளையாட, அவர்கள் அடித்த பந்து கார்த்திகேயன் குடிலுக்குள் விழுந்திருக்கிறது.

அதை எடுக்கச் சென்ற சிறுவனை அங்கிருந்த ஒருவர் அடித்து விரட்ட, இந்த தகவல் ஊராருக்குத் தெரிந்து குடிலுக்குள் நுழைந்துள்ளனர். அங்குதான் கார்த்திகேயனின் சித்துவிளையாட்டுகள் ஊராருக்குத் தெரிய வந்திருக்கிறது. உடனே போலீசாருக்கு தகவல் கொடுத்த பொதுமக்கள் மேற்படி அந்த குடிலுக்குள் தாங்கள் கண்டதை போலீசாரிடம் கூறியுள்ளனர். அந்த இடத்திற்கு வந்த பாடாலூர் போலீசாரும் கார்த்திகேயனை சம்பிரதாயத்திற்காக கைது செய்து சின்ன பெட்டி கேஸை போட்டு உள்ளே தள்ள, கொடுக்க வேண்டிய கட்டிங்கை கொடுத்து வெளியே வந்துள்ளான்.

அப்போதே அந்த குடிலுக்குள் கட்டுக்கட்டாக பணம், குவியல் குவியலாக சி.டி.க்கள், மனித மூளை, மனித உடல் உறுப்புகள், பன்றியின் தலை போன்றவை கிடைத்திருக்கின்றன. அதையெல்லாம் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் வெளியே விட்டுவிட்டனர்.

அந்த ஊர்மக்கள் விரட்டியடித்த

www.TheMagnat.com

www.TheMagnat.com



⏭ மந்திரவாதி வீடு



⏭ கைப்பற்றப்பட்ட கடல் குதிரைகள்

பின்னர்தான் பெரம்பலூர் எம்.எம்.நகரில் வாடகை வீட்டில் ராஜராகவன் என்ற பெயருடன் குடியேறியிருக்கிறான். எம்.எம்.நகரிலுள்ள அந்த வீட்டைச் சுற்றி தனித்தனியான பல பெரிய வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்றன. அப்பகுதிவாசிகளே, 'இந்த மந்திரவாதியை நாங்கள் பேப்பரில்தான் பார்த்தோம். கார் போர்டிகோவிற்குள் நுழைந்தவுடனேயே கேட்டை பூட்டி விடுவார்கள். யார் வருகிறார்கள், போகிறார்கள் என்றே தெரியாது' என்கின்றனர்.

வீடு முழுவதும் நைட் லேம்ப் ஒளி பட, அகோரமான காளி சிலைகள் என வர்றவங்களை உறைய வைக்கும் அளவிற்கு மந்திர உலகம் போல் வடிவமைத்திருக்கிறான். மேலும், மண்டை ஓடுகளைக் காட்டியும், மிருகத்தின் ரத்தத்தை மனித ரத்தம் எனக் கூறியும், இதெல்லாம் நான் நரபலி கொடுத்து சேகரிச்சு வச்சது என பல மாயாஜால வித்தைகளைக் காட்டியுள்ளான். அதனை பார்த்து மிரண்டு போன பலரும் செய்ய வேண்டிய பில்லி சூனியத்தைச் செய்து, கேட்ட தொகையை கமுக்கமாக கொடுத்துவிட்டுத் திரும்பியுள்ளனர்.

இவனுக்கு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் உள்ளிட்ட பல வி.ஐ.பி.க்களுடன் தொடர்பு இருந்திருக்கிறது. தமிழ் சினிமா பிரபலங்கள் மட்டுமல்லாது வடமாநில நடிகைகள் சிலரும் இவனுக்கு பரிச்சயம் ஆகியிருக்கிறார்கள். மேலும் புதுச்சேரி அமைச்சர்கள் மற்றும் அண்டை மாநில அரசியல் பிரமுகர்களோடும் தொடர்பில் இருந்திருக்கிறான். அதற்கு ஆதாரமாக ஒருசில சிடிக்கள் சிக்கியிருக்கின்றன. இதுதவிர, ஒருசில நிர்வாண பூஜைகளையும் நடத்தியிருக்கிறான். அது சம்பந்தமான சிடிக்களும் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

2005 காலகட்டங்களில் 100 ரூபாய் காசில்லாமல் அலைந்திருக்கிறான். மாந்திரீகம் சம்பந்தமான பேப்பர் விளம்பரங்களில்கூட தன்னுடைய நண்பனின் போன் நம்பரைத்தான் கொடுத்திருக்கான். அப்படி ஒரு போன்கூட இல்லாமல் இருந்தவன் கிட்டத்தட்ட 20-க்கும் மேற்பட்ட காஸ்ட்லியான செல்போன்கள், கார், பல லட்சம் கையிருப்பு என அபார வளர்ச்சி அடைந்தது எப்படி?

சென்னையில் இருந்து இளம்பெண்ணின் உடலை கொண்டு வந்த வினோத்குமார், சைக்காலஜி முடிச்சவன். ஆவிகளோட பேசுற ஆர்வத்துல கார்த்திகேயனை குருவா ஏத்துக்கிட்டு அவன் சொல்றதை செஞ்சிருக்கான். ஆனா, சென்னையிலிருந்து கார் மூலம் பெரம்பலூர் கொண்டு வர்றது எவ்வளவு பெரிய ரிஸ்க் என்பது வினோத்துக்குத் தெரியாதா? அப்படி எடுத்துவர வேண்டிய அவசியமென்ன?

இன்னும் சொல்லப்போனா அந்த பொண்ணு அபிராமி இறப்பையே கொஞ்சம் தீவிரமாக விசாரிக்கணும். அவங்க பெற்றோர் திட்டியதால்தான் அந்த பொண்ணு தற்கொலை செய்துகொண்டதா என்பதையும் தீர விசாரிக்கணும். இதையெல்லாம் பார்க்கையில், வெறும் மந்திர சக்திகளுக்காகத்தான் இந்தப் பிணத்தைக் கொண்டு வந்ததாக தெரியவில்லை.

மேலும், 40-க்கும் மேற்பட்ட கடல் குதிரைகளை போலீசார் கைப்பற்றியிருக்காங்க. அது பாதுகாக்கப்பட்ட ஓர் உயிரினம். அதை ஆஸ்துமா நோய்க்காக பொடி செஞ்சு சாப்பிட்டதாக விசாரணையில் சொல்லியிருக்கிறான். அதுவும் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை. ஒருவேளை, அதை தன்னுடைய நட்பு வட்டத்தை பயன்படுத்தி கடத்தி பணம் சம்பாதிப்பதற்காக பயன்படுத்தியிருக்கலாம் என்ற கேள்வியும் எழுகிறது.

அவனிடம் நடத்திய விசாரணையின் போது இதே மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுங்கட்சி பிரமுகருக்கு எம்.எல்.ஏ. சீட் கிடைக்க ஏற்கனவே பூஜை நடத்தியதாகவும் அதன்படி எம்.எல்.ஏ. சீட் கிடைத்து வெற்றி பெற்றதாகவும் தற்போது அவர் அமைச்சராவதற்குத்தான் இந்த சடலத்தை வைத்து பிரத்யேக பூஜை செய்ய திட்டமிட்டதாகவும் கூறியிருக்கிறான். இது நம்பும்படியாக இல்லை. அதே வேளை, இதனை புறந்தள்ளவும் முடியாது" என்றார்.

மந்திரவாதியின் மர்ம முகத்தை தோலுரித்து காட்ட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பும். ■

www.TheMagnat.com

# பலன் பெற்றோர் பாராட்டுகிறார்கள்!

## கால் மூட்டு வலி



நான் கடந்த 5 வருடங்களாக கால் மூட்டுவலியால் அவதிப்பட்டு வந்தேன். வீட்டு வேலை கூட செய்யமுடியாது. ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில் அறுவைசிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். எனக்கு பயமாகி விட்டது. பிறகு டி.வி. மற்றும் புத்தகத்தின் மூலம் ரப்பானி வைத்தியசாலாவின் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் வந்து ரப்பானி வைத்தியசாலாவில் நான் சிகிச்சை பெற்றேன். நான் தற்போது முழுமையாக மிகவும் குணமடைந்து எல்லா வேலைகளையும் செய்கிறேன்.

– திருமதி.சந்திரா, ஆவடி, சென்னை.

## கால் மூட்டு வலி, வெரிகோஸ்வெயின்



மூட்டு தேய்மானத்தால் தினமும் கடுமையான மூட்டுவலி, அத்துடன் வெரிகோஸ்வெயின் பிரச்சனையால் காலில் இரத்த ஓட்டம் தடைபட்டு நான் மிகவும் தாங்கமுடியாத வலியால் அவதிப்பட்டேன். உட்கார, எழுந்திருக்க முடியாது. வீட்டு வேலைகள் கூட செய்ய முடியாது. அதன்பிறகு டி.வி. மற்றும் புத்தகத்தின் மூலம் ரப்பானி வைத்தியசாலாவின் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் வந்து சிகிச்சை பெற்று பலன் அடைந்தேன். இப்போது நான் எல்லா வேலைகளையும் செய்கிறேன்.

– திரு.ரவிச்சந்திரன், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.

## சோரியாசிஸ்



நான் கடந்த 15 வருடங்களாக சோரியாசிஸ் நோயால் அவதிப்பட்டேன். வெளியே போக முடியாது. உடலெங்கும் நமச்சல், அரிப்பு. பல டாக்டரிடம் சென்றும் பலன் கிடைக்கவில்லை. பிறகு டி.வி. மற்றும் புத்தகத்தின் மூலம் நான் ரப்பானி வைத்தியசாலாவின் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் வந்து சிகிச்சை பெற்றேன். பின்பு சோரியாசிஸ் நோய் முழுவதுமாக குணமாகிவிட்டது. இப்போது எனக்கு எந்த குறையும் இல்லை.

– திருமதி.மோகனா, பெரம்பூர், சென்னை.

www.TheMagnat.com

## முடக்குவாதம்



நான் கடந்த 4 வருடங்களாக முடக்குவாத நோயால் அவதிப்பட்டு வந்தேன். நான் தினமும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வலியினால் அவதிப்பட்டேன். என்னால் கீழே உட்கார்ந்து சாப்பிட முடியாது. நடக்கவும் முடியாமல் மிகவும் ரொம்ப சிரமப்பட்டேன். பிறகு டி.வி. மற்றும் புத்தகத்தின் மூலம் நான் ரப்பானி வைத்தியசாலாவின் விளம்பரத்தைப் பார்த்தேன். பிறகு நான் ரப்பானி வைத்தியசாலாவிற்கு நேரில் வந்து டாக்டரிடம் சிகிச்சை பெற்றேன். இப்போது எனக்கு எந்தவித பிரச்சனையும் இல்லை.

– திரு.நாராயணசாமி, அரக்கோணம்.

**கை, கால் வாதம், மூளை வளர்ச்சிக்குறைவு, மூலம், நரம்புத்தளர்ச்சி, பாலினகுறைபாடு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

**தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவர்**

**டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார் ரப்பானி வைத்யசாலா,**

**புது எண்.139, ப.எண்.65, டாக்டர் பெசன்ட்ரோடு, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில், இராயப்பேட்டை, சென்னை-600 014. போன்: 28476969, 28470874,**

**பார்க்கும் நேரம் : காலை 9 மணி முதல் 2 மணி வரை. ஞாயிறு விடுமுறை**



CAPTAIN TV
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 8.30 முதல் 9.00 வரை

வேந்தர்
காலை 10.30 முதல் 11.00 வரை

WIN TV
தினமும் மாலை 5.மணிக்கு

தமிழன்
திங்கள் முதல் வெள்ளி வரை – காலை 9.30 மணிக்கும், மாலை – 6 மணிக்கும், புதன் மற்றும் வியாழன் – இரவு 11.00 மணிக்கு மற்றும் சனி – மாலை 5 மணிக்கும்.

MEGA TV
திங்கள் முதல் சனி வரை
காலை 9.00 முதல் 9.30 வரை

மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவமாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.

www.TheMagnat.com

ஈரோடு

ஈரோடு பெருந்துறையில் நடந்த ஈமு கோழிப்பண்ணை மோசடியையே தூக்கி சாப்பிடும் விதமாக விவசாயிகளிடம் நூதன முறையில் மோசடி செய்து, பல கோடி ரூபாயுடன் ஓட்டம் பிடித்திருக்கிறார் சத்தியமங்கலத்தை சேர்ந்த ஒருவர்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே கரட்டடிபாளையத்தில் உள்ள தனியார் கட்டடத்தில் 'ஈரோடு மாவட்டம் தென்னை உற்பத்தியாளர்கள் ஒன்றியம்', 'ஸ்ரீ திருப்பதி பாலாஜி வீட்டுவசதி சொசைட்டி லிமிடெட்' என்கிற பெயரில் இரண்டு அலுவலகங்கள் செயல்பட்டு வந்தது. தங்களை அரசு அலுவலர்கள் என்று கூறிக்கொண்டு,





மோசடி நிறுவன அலுவலகத்தில் சோதனை செய்த அதிகாரிகள்...

வறண்டு கிடக்கும் தென்னை மரங்களை காப்பாற்ற அரசு சார்பில் விவசாயிகளுக்கு 50 சத விகிதம் மானியத்தில் ஆழ்குழாய் கிணறு மற்றும் மும்முனை மின்சார இணைப்பு அமைத்து தருவதாகக் கூறியுள்ளனர்.

மேலும் உறுப்பினராகச் சேர தலா 10 ஆயிரமும், தோட்டத்து பத்திர நகல், பட்டா, சிட்டா, ஆதார் கார்டு, ரேஷன் கார்டு, எப்.எம்.பி. மேப் உள்ளிட்ட ஆவணங்களையும் கொண்டு வந்தால், ஆழ்குழாய் கிணறு அமைக்கவும் மும்முனை மின்சாரம் வழங்கவும் ஏற்பாடு செய்து தருவதாகவும் கூறி பல கோடிகளை விவசாயிகளிடம் கறந்திருக்கின்றனர்.



## போலி அரசு அலுவலகம் நடத்தி..

# தென்னை விவசாயிகளை

www.TheMagnat.com

ஏ.முகமது ரஃபி

# உறிஞ்சிய தில்லாலங்கடி!



“50,000 ரூபாய் டெபாசிட் செய்தால், சிறு குறு விவசாயிகளுக்கு 3 செண்ட் நிலம், அதில் குடியிருக்க புதிய வீடு கட்டிக் கொடுப்போம்.”

அரசு சார்பில் ஆழ்குழாய் கிணறு மற்றும் மும்முனை மின்சாரம் இணைப்பு கிடைக்கிறது என்கிற செய்தி காட்டு தீயாகப் பரவ, வறட்சியின் கொடுமைக்கு இப்படியொரு விமோசனம் கிடைத்தால் யார்தான் படையெடுக்க மாட்டார்கள்? கோபிசெட்டிபாளையம் சுற்றியுள்ள அளுக்குளி, பங்களாப்புதூர், கரட்டடிபாளையம், டி.என்.பாளையம், கொடிவேரி, நம்பியூர், மொடச்சூர் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்ந்து 10,000 ரூபாய் கட்டியுள்ளனர். மேலும் சில விவசாயிகளிடம் பல்வேறு காரணங்களைக் கூறி 25,000 ரூபாய்வரை பெற்றிருக்கின்றனர்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த ஒரு சில விவசாயிகளின் தோட்டத்துக்கு ஜீப்பில் சென்ற தில்லாலங்கடி டீம், ஆழ்குழாய் கிணறு அமைக்கும் நீர்மட்ட நிபுணர் என சேலத்தை சேர்ந்த ஒருவரையும் கூடவே அழைத்துச் சென்றுள்ளது. அவருக்குக் கொடுக்க வேண்டும் என 2,000 ரூபாயை ஒவ்வொரு விவசாயியிடமும் தனியாக வசூலித்துள்ளனர்.

‘தோட்டத்துக்கு ஆபீசருங்க வந்தாங்க. பணமும் கட்டிட்டேன். ரெண்டு மாசம் ஆச்சு. இன்னும் ஒரு சத்தத்தையும் காணோம். போய் கேட்டால், ‘போர்வெல் வண்டி ஒவ்வொரு ஊரா போய்க்கிட்டு இருக்கு. சீக்கிரம் வந்துடும்னு சொல்லி திருப்பி அனுப்புறாங்க’ என அளுக்குளியைச் சேர்ந்த ஒரு விவசாயி ‘தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால் பாசன சபைத் தலைவரும் வழக்கறிஞருமான சுபி.தளபதியிடம் புலம்பியுள்ளார்.

அதைக் கேட்டதும் சுபி.தளபதிக்கு தூக்கி வாரி போட்டுள்ளது. ‘பாசன சபையில் பொறுப்பில் இருக்கும் நமக்கு இந்த தகவல் எட்டாமல் போனது எப்படி?’ என யோசித்தபடி, அந்த விவசாயியை உடன் அழைத்துக் கொண்டு அந்த அலுவலகத்துக்குச் சென்றிருக்கிறார்.

‘அங்கு நடந்தது என்ன?’ வழக்கறிஞர் சுபி.தளபதி சொல்வதைக் கேட்போம். “மார்ச் 10-ம் தேதி அந்த அலுவலகத்துக்குப் போனேன். அங்கிருந்தவர்களிடம் விசாரித்த போது அது அரசு நிறுவனம் இல்லை என்பதும் ‘டுபாக்கூர்’ ஆசாமிகள் என்பதும் தெரிந்தது. அங்கிருந்தபடியே ஈரோடு கலெக்டர் பிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் சதீஷ் ஆகியோருக்கு போன் போட்டுச் சொல்லிவிட்டு வந்தேன். அவ்வளவுதான், அடுத்த 1 மணி நேரத்தில் வேளாண்மை, வருவாய், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கூட்டுறவுத்துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளை அனுப்பி விசாரிக்குமாறு உத்தரவிட்டார் டி.ஆர்.ஓ.

சுபி தளபதி

அதிகாரிகள் சோதனை செய்த போது, அங்கு போலி அரசு முத்திரைகள் இருந்ததையும் பணம் வாங்கியதற்கான ரசீது புத்தகங்கள், பாஸ்புக் மற்றும் விவசாயிகளிடம் பெறப்பட்ட

www.TheMagnat.com

www.TheMagnat.com

ஆவணங்களின் நகல்கள் பண்டல் பண்டல்களாக இருந்ததையும் கண்டு அதிர்ந்தனர்.



⏭ சதீஷ்

இன்னொரு பகுதியில் 'ஸ்ரீதிருப்பதி பாலாஜி வீட்டுவசதி சொசைட்டி லிமிடெட்' என்கிற பெயரில் ரசீது புத்தகம் அச்சடித்து வைத்திருந்தனர். 'அனைவருக்கும் இலவச நிலம், வீடு கட்டும் திட்டத்தை பிரதமர் அமல்படுத்தியிருக்கிறார். அந்த புராஜெக்ட்டுக்கு நாங்கள்தான் ஏஜென்ட். 50,000 ரூபாய் டெபாசிட் செய்தால், சிறு குறு விவசாயிகளுக்கு 3 சென்ட் நிலம், அதில் குடியிருக்க புதிய வீடு கட்டிக் கொடுப்போம்' என்றும் பீலா விட்டுள்ளனர். இதை நம்பி பல விவசாயிகள் தலா 50,000 பணத்தை கட்டியுள்ளனர்.

மேலும், தமிழக அரசின் சார்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்காக இலவச நீர்ப்பாசன




⏭ மோசடி நிறுவனத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகள்...

திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் விண்ணப்பத்தை ஜெராக்ஸ் எடுத்து வைத்துக் கொண்டு, பிரதம மந்திரி வீடு திட்டம், இலவச ஆழ்குழாய் கிணறு திட்டம் என அனைத்துக்கும் ஒரே விண்ணப்பத்தை விவசாயிகளின் தலையில் கட்டி பணம் பறித்துள்ளனர். சத்தியமங்கலத்தைச் சேர்ந்த சீனிவாசன் என்பவர்தான் மேற்படி இரண்டு நிறுவனத்தையும் அரசுத் துறை போல் போலியாக நடத்தி வந்துள்ளார்.

அதிகாரிகள் விசாரணைக்கு வந்த போது அவர் அங்கு இல்லை. இப்போது விஷயம் கேள்விப்பட்டு தலைமறைவாகி விட்டார். அங்கு அக்கவுன்டன்டாக இருந்த சிலுவைமுத்து என்பவரிடமும் அதிகாரிகள் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பணம் பெற்றுக் கொண்டதற்கு பாஸ்புக் என்ட்ரியும் போட்டு கொடுத்துள்ளனர். அந்த பாஸ்புக், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி என்று மட்டும் இருந்துள்ளது. எந்த கிளை, அக்கவுன்ட் நம்பர் என்ன என்பது போன்ற எந்த விவரங்களையும் குறிப்பிடாமல், வெறுமனே தொகையை வரவு வைத்து விவசாயிகளுக்கு பாஸ்புக்கை மட்டும் கொடுத்து ஏமாற்றி வந்துள்ளனர். தமிழக அரசு என்று ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு ஜீப் மூலம் தோட்டங்களுக்குச் சென்று போலியாக ஆய்வு நடத்தியும் நடித்தும் வந்துள்ளதும் இப்போது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ஈமு கோழிப்பண்ணை விவகாரத்தில் எப்படி தமிழகம் முழுவதும் மோசடி நடைபெற்று கோடிக்கணக்கில் பணம் சுருட்டப்பட்டதோ, அப்படி இங்கு விவசாயிகளிடம் நடைபெற்ற மோசடியில் இங்கு மட்டுமே சுமார் 4,000 பேர் வரை ஏமாற்றப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. பிற மாவட்டங்களில் இவர்களின் போர்ஜரி அரங்கேறியதா என்றும் விசாரிக்க வேண்டும்" என்று மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார்.

மோசடி குறித்து ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சதீஷிடம் கேட்டோம். "இதுவரை பாதிக்கப்பட்ட விவசாயிகள் யாரும் புகார் கொடுக்கவில்லை. ஆனாலும் நிர்வாகத்தின் காதுக்கு இந்த விவகாரம் எட்டியதும் விசாரணை செய்து அந்த அலுவலகத்தை சீல் வைத்து விட்டோம். தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது. புகார் இல்லை என்று அப்படியே விட்டுவிட முடியாது இல்லையா? அரசு பெயரைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டுள்ள அந்நிறுவனத்துக்கு எதிராக கடத்தூர் காவல் நிலையத்தில் ஈரோடு மாவட்ட வேளாண் உதவி இயக்குநரை வைத்து புகார் கொடுக்கச் செய்துள்ளோம்.

பல கோடி ரூபாய் பறிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதால், இந்தப் புகாரை பொருளாதார குற்றப்பிரிவுக்கு மாற்றும் முடிவில் இருக்கிறது மாவட்ட நிர்வாகம். அரசே முதலில் புகார் கூறியிருப்பதால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் தைரியமாக முன்வந்து தங்களிடம் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் அந்நிறுவனத்தின் மீது புகார் கொடுக்கலாம் என்றும் அறிவிக்க போகிறோம். விரைவில் நடவடிக்கை பாயும்" என்றார் பொறுப்புடன்.

ஒரிஜினலே போலிகளிடம் தோற்றுப் போகும் என்பதற்கு மேற்படி மோசடியே சாட்சி! ■

www.TheMagnat.com

# குமுதம்

22-3-2017



**குழந்தைகளுக்கு வரும் கோடைக்கால நோய்கள்!**

**ஹெல்த் ஸ்பெஷல்!**

**வேலையை பறித்த வீடியோ!**

டி.வி. ஸ்டார் மோனிகா அதிரடி

**வீடு கட்டப் போறேன்னு சொன்ன மகனுக்கு கல்லறை கட்டிட்டாங்களே!**

மீனவத்தாயின் மீளா சோகம்

**காதலுக்காகவும், கல்யாணத்துக்காகவும் சினிமாவைத் துறந்த 'பிச்சைக்காரன்' பட நாயகி**

சாட்னா டைட்டஸ்!

**கமலைவிட்டு விலகியது முதல் பிரதமர், முதல்வரை சந்தித்ததுவரை...**

கௌதமி பளீர் பேட்டி

www.TheMagnat.com

மகளிர் மட்டும் நாயகிகள்

**பானுபிரியா, ஊர்வசி, சரண்யா**

**கலகல சந்திப்பு**



www.TheMagnat.com



எஸ்.ஷக்தி

# “எனது மகனை ஐ.எஸ்.ஸில் சேர்த்தது குரேஷிதான்!”



இஸ்லாமிய மதபோதகர் ஜாகீர் நாயக்கின் இஸ்லாம் ஆராய்ச்சி அறக்கட்டளையில் கவுரவ உறவிலான மேலாளராக இருப்பவர் ஆர்ஷி குரேஷி. இவர் ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவாக இந்திய இளைஞர்களை மூளைச்சலவை செய்து மாற்றியதாக மத்திய உள்துறைக்கு அழுத்தமான நோட் ஒன்றை இரண்டு வருடங்களுக்கு முன்பே வைத்தது தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.). எனினும், குரேஷியை வளைப்பதற்கு சரியான காரணங்கள் மற்றும் துருப்புச்சீட்டுகள் எதுவும் இல்லாததால் பதுங்கியிருந்தே கண்காணித்து வந்தது.

இதனிடையே, குரேஷியின் கால்கள் கேரளத்தில் ஆழமாக தடம் பதிக்க ஆரம்பித்தன. மதமாற்றம் செய்வதில் இவர் தீவிரம் காட்டுவதாக கேரள பா.ஜ.க. நிர்வாகிகள் குற்றம் சாட்டியதோடு, இவரின் செயல்பாட்டை தடை செய்யுமாறு மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை வைத்தனர். இந்தச் சூழலில், குரேஷி இளைஞர்களை மூளைச்சலவை செய்து ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவாக மாற்றுவதை ஆதாரத்துடன் என்.ஐ.ஏ. ஆவணமாக்கியது. விளைவு... கடந்த ஆகஸ்டில் குரேஷி கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்திய விசாரணையில், வலுவான விஷயங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதையடுத்து அவருக்கு உண்மை கண்டறியும் சோதனை நடத்த அனுமதி கேட்டு என்.ஐ.ஏ. மனு தாக்கல் செய்தது. ஆனால், இதற்கு சிறப்பு நீதிமன்றம் அனுமதி மறுத்து விட்டது. அதற்காக குரேஷி விவகாரத்தை அப்படியே விட்டுவிட என்.ஐ.ஏ. தயாராக இல்லை. கேரளத்திலிருந்து ஐ.எஸ். அமைப்பில் இணைவதற்காக நாடு கடந்து பறந்தவர்களின் சொந்தங்களை அணுகி பேசினார்கள்.

இதில் மஜித் என்பவரின் தாய் பல உண்மைகளைப் போட்டு உடைத்திருக்கிறார். அதாவது, குரேஷிதான் தனது மகனை மூளைச்சலவை செய்ததாக என்.ஐ.ஏ.விடம் சொல்லியிருக்கிறார். மஜித்தின் தாய் பற்றிய விவரங்களை ரகசியமாக வைத்திருக்கும் என்.ஐ.ஏ. அதிகாரிகள், அவர் கூறியதாக சில தகவல்களை மட்டும் கசிய விட்டிருக்கிறார்கள். இதில் நமக்குக் கிடைத்த தகவல்கள் இதோ...

“தலைமறைவான எனது மகன் ஐ.எஸ். அமைப்பில்தான் இணைந்துள்ளான் என்பது ஊர்ஜிதமாகிறது. அல்லாஹ் வழியில் நடந்தவனுக்கு இந்த வழியைக் காட்டியது குரேஷிதான். கடந்த பல மாதங்களாகவே அவர் புராணம் பாடுபவனாகவே இருந்தான். குரேஷியின் அறிவுரைப்படி,

www.TheMagnat.com



⏭ ஆர்ஷி குரேஷி கைதானபோது...

## பெண் பகீர் வாக்குமூலம்

மனைவி, குழந்தையை அழைத்துக் கொண்டு இஸ்லாம் பற்றிப் படிப்பதற்காக இலங்கை உள்ளிட்ட தேசங்களுக்குச் சென்று வந்தான். குரேஷியின் கரத்தை வலுப்படுத்துகிறேன் என்று சொல்லி தனது நண்பர்களையும் இழுக்க பார்த்தான். என்னைப் போல் கணிசமான கேரள தாய்மார்களின் மகன்களும் தங்களை ஐ.எஸ். ஸில் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று நீள்கிறது.

இதையடுத்து, மஜித்தின் தாய் சொல்லியதை அடிப்படையாக வைத்தும் மேலும் பல விஷயங்களை மேற்கோள்காட்டியும் குரேஷிக்கு உண்மை கண்டறியும் சோதனை நடத்த அனுமதி கேட்டு மீண்டும் ஒரு மனுவை தாக்கல் செய்யவிருக்கிறதாம் என்.ஐ.ஏ. அத்துடன், குரேஷிக்கு எதிராக இன்னும் பல இஸ்லாமிய தாய்மார்களின் வாக்குமூலங்களை ஆவணப்படுத்தும் மூவ்களிலும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் கேரளத்தினுள் வளைய வந்து கொண்டிருக்கிறார்கள்.

இதுகுறித்து என்.ஐ.ஏ. அதிகாரிகளிடம் பேசினோம். "மிகத் தெளிவான தூண்டில் வார்த்தைகளால் இளைஞர்களை ஈர்த்திருக்கிறார் குரேஷி. தனது போதனைகளுக்குப் பிறகு ஐ.எஸ். அமைப்பை நோக்கி நகரும் இளைஞர்களின் தேவைக்கான அனைத்து செலவுகளையும் குரேஷியே செய்திருக்கிறார். அந்தளவுக்கு அவருக்கு பணம் எங்கிருந்து வந்தது, வருகிறது என்பது தீர்க்கப்பட வேண்டிய கேள்வி. அவரை உண்மை கண்டறியும் சோதனைகளுக்கு உட்படுத்தினால்தான் இதற்கான விடை கிடைக்கும். அப்போதுதான் ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவாக இந்தியாவில் உள்ள இயங்கு தளங்களை முற்றிலுமாக கண்டறிந்து வேரறுக்க முடியும்" என்கிறார்கள்.

ஆனால், குரேஷியின் கைது மற்றும் அவர் மீது அடுக்கப்படும் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுக்கும் இஸ்லாம் ஆராய்ச்சி அறக்கட்டளை, "இந்த உலகில் இஸ்லாம் குறித்து தவறான தகவல்கள், புரிதல்களை சிலர் கொண்டிருக்கிறார்கள். அதை பக்குவமாக துடைத்தெறிவதுதான் இந்த அறக்கட்டளையின் பணி. மதமாற்றம் என்பது எங்களின் நோக்கமுமல்ல, அதை நாங்கள் என்றும் செய்ததுமில்லை.

குரேஷி என்றுமே யாரையுமே மதம் மாறச் சொல்லி வற்புறுத்தியதில்லை. தன்னை நாடி வந்து இஸ்லாம் குறித்து சந்தேகம் கேட்பவர்களுக்கு அல்லாஹ் பற்றிய தெளிவை கொடுத்திருக்கிறார். எனவே, குரேஷி மற்றும் எங்களது அறக்கட்டளையின் செயல்பாடுகள் பற்றி புனையப்படும் கற்பனை குற்றச்சாட்டுகளை அடியோடு மறுக்கிறோம்" என்கிறார்கள். ■

www.TheMagnat.com



# "ஈழ அகதிகளுக்கு பிரபாகரன் மீதும் கோபம் இருக்கிறது!"

## நெல்லை பல்கலை. ஆய்வில் 'பகீர்'

இலங்கையில் 'தனி ஈழம்' கேட்டு 36 ஆண்டுகளாக நடந்த போராட்டம் 2009-ல் முடிவுக்கு வந்தது. இந்த காலகட்டத்தில் புலிகளுக்கும் சிங்கள ராணுவத்துக்கும் இடையில் சிக்கிக் கொண்ட அப்பாவித் தமிழர்கள் அகதிகளாக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர்.

குறிப்பாக தமிழகத்திற்கு அதிக எண்ணிக்கையிலான ஈழத்தமிழர்கள் அகதிகளாக வந்தனர். இவ்வாறு வந்தவர்கள் ஈழத்தில் சண்டை முடிந்து இயல்பு நிலை திரும்பியதும், அகதிகள் நாடு திரும்ப வேண்டும் என்று இந்திய, இலங்கை அரசுகள் வற்புறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், லண்டனில் செயல்படும் சர்வதேச சட்டத்துறை ஆய்வு மையத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளை கவனித்து வரும் பேராசிரியர் கண்ணமுத்து சிதம்பரநாதன் என்பவர் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 'தாயகம் திரும்புவோம்' என்கிற தலைப்பில் இலங்கை அகதிகளின் நிலை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

இலங்கை மட்டக்களப்பைச் சேர்ந்த இவர் நடத்திய ஆய்வில் தான் ஈழத் தமிழர்கள் அகதிகளாக மாறியதற்கு விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனும் காரணம் என்ற கோபம் அவர்களுக்கு இருப்பது தெரிய வந்துள்ளது. இதுகுறித்து பேராசிரியர் கண்ணமுத்து சிதம்பரநாதனை சந்தித்து பேசினோம்.



பிரபாகரன்

"இலங்கையில் 24.7.1983 அன்று நடந்த 'ஜூலை கலவரம்' தான் சர்வதேசத்தின் கவனத்தை இலங்கையின் பால் ஈர்த்த விடயம். சிங்களர்களுக்கு எதிராக ஏற்பட்ட இந்த கலவரத்தில் 3,000 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதன் பிறகே ஈழத்தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு செல்லத் தொடங்கினார்கள். 1983 முதல் இறுதிப்போர் நடந்த 2009 வரை 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தமிழகம் உட்பட பல்வேறு நாடுகளிலும் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.

தற்போது சண்டை முடிந்த நிலையில், அவர்கள் மெல்ல நாடு திரும்பத் தொடங்கி இருக்கிறார்கள். எனினும், தமிழகத்தில் மொத்தமுள்ள 110 அகதிகள் முகாம்களில் சுமார் ஒன்றரை லட்சம் பேரும், வெளியில் சுமார் 50 ஆயிரம் பேரும் என மொத்தம் 2 லட்சம் அகதிகள் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களின் மனநிலை எப்படி இருக்கிறது? நாடு திரும்ப போகிறார்களா? அல்லது தமிழகத்திலேயே அகதிகளாக வாழ விரும்புகிறார்களா? என்பதை அறிந்துகொள்ள நினைத்தோம்.

இதற்காக நூற்றுக்கணக்கான கேள்விகள் அடங்கிய ஒரு படிவத்தை தயாரித்தோம். அதை அவர்களிடம் கொடுத்து நிரப்பச் சொன்னோம். பெரிய தயக்கத்திற்குப் பிறகே அவர்கள் படிவத்தை நிரப்பினார்கள். எல்லோரையும் ஒரே நேரத்தில் சந்திக்க முடியாததால் இந்த ஆய்வை முடிக்க 4 ஆண்டுகள் ஆனது" என்றவரிடம், ஆய்வு முடிவுகள் பற்றிக் கேட்டோம்.

"தமிழ்நாட்டில் வேண்டா விருந்தாளியாகத்தான் இலங்கை அகதிகள் இருக்கிறார்கள். அவர்கள் வியாபாரம் செய்யலாம். ஆனால்

www.TheMagnat.com

அ.துரைசாமி


அகதிகள் முகாம்

சொத்து வாங்க முடியாது. உயர் கல்வி கற்றாலும் குடியுரிமை இல்லாததால் அரசு வேலை மறுக்கப்படுகிறது. எனவே, அகதிகள் அனைவருமே பெட்டிக்கடை வைத்தும், பெயின்டர் உள்ளிட்ட கூலித் தொழிலாளிகளாகவுமே வாழ்கிறார்கள்.

இதுபோன்ற சூழலால் இவர்களில் 45 சதவிகிதம் பேர் நாட்டுக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். மீதிப் பேர் குழப்பமாயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதேசமயம், கொழும்பு சென்று அங்கிருந்து வடகிழக்குப் பகுதிகளுக்குப் போவதை யாரும் விரும்பவில்லை. ராமேசுவரம் - தலைமன்னார் கப்பல் போக்குவரத்து தொடங்கினால் ஈசியாக ஊர் திரும்பலாம் என்பது அகதிகளின் எண்ணம். உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதோடு, அபகரிக்கப்பட்ட காணிகளும் திரும்பக் கிடைத்தால் அனைவருமே நாடு திரும்ப வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அகதிகளில் 90 சதவிகிதம் பேர் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்களே. இவர்கள் வீட்டுக்கு ஒருவர் புலியாக வேண்டும் என்ற புலிகளின் நிர்ப்பந்தத்தாலும் ராணுவத்தினரின் கொடுமைகளைச் சகிக்க முடியாததாலும் அகதிகளாக வந்தவர்கள். தங்களின் இந்த அவலநிலைக்கு பிரபாகரனும் சிங்கள ராணுவமுமே காரணம் என்கிற குமுறல் அவர்களிடம் இருக்கிறது.

தவிர, சண்டையின்போது சுமார் 14,000 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களின் நிலை என்ன என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்பது அகதிகளின் கோரிக்கையாக இருக்கிறது. மீதி 10 சதவிகிதம் பேர் லண்டன், பிரான்ஸ், கனடா உள்ளிட்ட 60 நாடுகளில் செட்டிலானவர்கள். அவர்களுக்கு நாடு திரும்ப வேண்டும் என்கிற எண்ணமே இல்லை. எனவே, நாடு திரும்பத் தயாராக இருக்கும் தமிழக அகதிகளுக்கு, அதற்கான சூழலை இந்திய அரசுதான் அமைத்துத் தர வேண்டும்" என்றார்.


கண்ணமுத்து சிதம்பரநாதன்

இந்த அறிக்கை இலங்கை மற்றும் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் கண்ணமுத்து சிதம்பரநாதன் தெரிவித்தார். ■

www.TheMagnat.com

சென்னை



# ஆண்மைக்கு 'ஆப்பு' வைக்கும் டானிக்!

கடந்த சில தினங்களுக்கு முன்பு நமது அலுவலக தொலைபேசி அலறவே, எடுத்து காதில் வைத்தோம். "சென்னை திருவல்லிக்கேணி அமீர் மஹால் அருகே இரவு 7 மணிக்கு மேல், பசங்க ஒதுங்கி எதையோ வாய்ல ஊத்திக்குறானுங்க. எல்லாருமே சின்னச் சின்ன பசங்க. என்னான்னு கொஞ்சம் பாருங்க சார்" என்றது நமது வாசகரின் குரல். அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு சற்று முன்னதாகவே, அந்த ஸ்பாட்டில் ஆஜரானோம்.

சரியாக மணி 7-ஐ தொட்டது. உயர்ரக பைக்குகளில் பறந்து வந்து இறங்கியது ஒரு இளைஞர் பட்டாளம். பைக்கை நிறுத்தியவர்கள், சட்டைப் பைக்குள் இருந்து சிறிய அளவிலான ஏதோ ஒரு பாட்டிலை எடுத்தனர். அதை, ஒரே மடக்காக வாய்க்குள் ஊத்திக் கொண்டு, பாட்டிலை தூக்கி எறிந்தனர். பின்னர், கண்கள் சொருக வானத்தைப் பார்த்தபடியே சில மணித்துளிகள் அங்கேயே நின்றார்கள். யாருக்கும் 20 வயதைக்கூட தாண்டவில்லை. சற்று நேரத்தில் தலையை ஒரு சிலுப்பு சிலுப்பிவிட்டு வந்த சுவடு தெரியாமல் காற்றில் கரைந்து விட்டனர்.

உடனே, நாம் கிட்டப்போய் அது என்ன பாட்டில் என்று பார்த்தோம். அவர்கள் பருகியது 'எஸ்கிமோ சிரப்' என்ற இருமல் மருந்து. அதை நோட் பண்ணிக் கொண்ட நாம், இதுகுறித்து சில மருத்துவர்களிடம் விசாரித்தோம். அப்போது நமக்குக் கிடைத்த தகவல்கள் எல்லாம் அதிர்ச்சி ரகம்!

"இந்த சிரப்பில் 'கொடேய்ன் பாஸ்பேட்' என்ற வேதிப்பொருள் கலக்கப்படுகிறது. இந்தியாவில் தடை செய்யப்பட்ட பொருட்களுள் இதுவும் ஒன்று. வலி நிவாரணியாகவும் இருமல் மருந்தாகவும் பயன்படுத்தப்படும் இந்த டானிக்கை குறிப்பிட்ட அளவிற்கு மேல் உட்கொண்டால், மூளை நரம்புகளை தூண்டிவிட்டு குடிப்பவரை ஒருவிதமான மயக்க நிலையிலேயே வைத்திருக்கும்.

அதிகப்படியாக இந்த டானிக்கை எடுத்து கொள்ளும்போது, ரத்த அழுத்தம் குறைந்து இதயத் துடிப்பே நின்றுவிடும் அபாயம் உள்ளது. மேலும் மாரடைப்பு அபாயமும் உள்ளது. இதற்கு அடிமையானவர்கள் 'ஹாலுசினேஷன்' எனப்படும் நிஜத்தில் இல்லாத ஒன்றை கற்பனை செய்து கனவில் மிதப்பது போன்ற ஒரு மனநிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். நாடித்துடிப்பு, ரத்த அழுத்தம் எல்லாம் குறைந்து ஒருவிதமான போதை மூளையை ஆட்கொள்ளும்.

இரவில் தூக்கம் வராது. இறுதியில் இந்த மருந்து இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்ற நிலைக்கு ஆளாகி விடுவார்கள். குறிப்பாக, இந்த டானிக்கால் விந்தணு உற்பத்தி நீர்த்து

www.TheMagnat.com

www.TheMagnat.com

# ஆபத்தை உணராமல் போதை ஏற்றும் 'சுள்ளான்'கள்

குரு நடேசன்

போகும் அபாயமும் உள்ளதால், காலப்போக்கில் ஆண்மை பறிபோய்விடும். குடியைவிட மிகப்பெரிய ஆபத்து இது போன்ற டானிக்குகள்'' என்கிறார்கள் மருத்துவர்கள்.

இந்த டானிக்கை மருத்துவர்களின் அறிவுரை இல்லாமலோ, அவர்கள் மேற்பார்வை இல்லாமலோ விற்கவோ, அருந்தவோ கூடாது என்பது விதி. ஆனால், இளசுகளின் கைகளில் இந்த டானிக் எந்தவித தடையுமின்றி தவழ்வது தான் எப்படி எனப் புரியவில்லை. இதுகுறித்து ஐஸ்ஹவுஸ் மருந்துக் கடை உரிமையாளர் ஹாஜா மொய்தீன் கூறுகையில், "வியாபாரம் இல்லாமல் காற்றாடும் சில மருந்துக் கடைக்காரர்கள் இதுபோன்ற டானிக்குகளை மருத்துவரின் சீட்டு இல்லாமல் சட்டத்திற்குப் புறம்பாக விற்கிறார்கள்.

மருந்து மாத்திரைகளை விற்பதைவிட, இதுபோன்ற டானிக்குகளை ஒரு நாளைக்கு 20 பாட்டில்கள் விற்றாலே போதும், 1000 ரூபாய் கல்லா கட்டிவிடலாம். முதலில் இந்த டானிக்கை தடை செய்துதான் வைத்திருந்தனர். பின்பு 'கொடேய்ன் பாஸ்பேட்'டோடு வேறு சில மருந்துப் பொருட்களையும் பெயருக்கு கலந்து, புதிய லேபிளுடன் மார்க்கெட்டிற்கு வந்துள்ளது. விஷத்தோடு தேன் கலந்தால் என்ன... வெல்லம் கலந்தால் என்ன.. விஷம் விஷம் தானே!" என்றார்.

இந்த டானிக் பாட்டில்கள் பங்களாதேஷ், மியான்மர் வழியாக வடகிழக்கு மாநிலங்களில் விற்கப்படுவது கடந்தாண்டு கண்டுபிடிக்கப்பட்டு கடும் நடவடிக்கைகளை திரிபுரா காவல்துறை எடுத்தது. சில மாதங்களுக்கு முன்னர் கூட தெலுங்கானா காவல்துறை நடத்திய திடீர் ரெய்டில் மருந்து குடோன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த, 'கொடேய்ன் பாஸ்பேட்' கலந்த ஆயிரக்கணக்கான டானிக் பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த டானிக் 'ஜெனிரிக் மெடிசன்' என்பதால், இப்போது குடிசைத் தொழில் போன்று ஆங்காங்கே தயாரிப்புப் பணி நடக்கிறது.



ஹாஜா மொய்தீன்

வழி தவறிச் செல்லும் இளைஞர்களை நெறிப்படுத்த சில கடும் நடவடிக்கைகள் தேவை. சென்னை மாநகராட்சியின் சுகாதாரத்துறையும் காவல்துறையும் இணைந்து இதுபோன்ற 'கொடேய்ன் பாஸ்பேட்' கலந்த மருந்துகளை விற்கும் கடைகளின் மீது அதிரடியை பாய்ச்சினால்தான் போதை இளைஞர்களின் வாழ்வு நெறிப்படும்.

படங்கள்: கணேஷ்





குடித்துவிட்டு போடப்பட்டுள்ள காலி பாட்டில்கள்

www.TheMagnat.com

ஒரு இலங்கைப் பெண்ணின் வெளிநாடுவாழ் கஷ்டத்தை வர்ணிக்கும் கதையொன்றை மிராக்கிள் மிஷ்கினின் அசிஸ்டென்ட் ஒருவர் ஈராஸ் நிறுவனத்திடம் சொல்லி ஓ.கே. வாங்கிவிட்டார். அந்தப் பெண் வேடத்தில் நடிக்க நயன்தாராவும் ஆரம்பத்தில் சம்மதித்து கால்ஷீட்டும் கொடுத்தார். இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை... நடிப்பதற்கு மறுத்து நடுங்கிப் போயிருக்கிறாராம். நயன் நழுவியதால் படமும் டிராப்பாம்!

'இதுதான்டா இன்டர்நெட் கிரைம்' என்று இளசுகளுக்கு பாடம் புகட்ட வருகிறது 'இணையதளம்' படம். கோவை நண்பர்களான சங்கர், சுரேஷ் இணைந்து தயாரித்து இயக்கி இருக்கும் இப்படத்தில் கணேஷ் வெங்கட்ராம், ஸ்வேதா மேனன், ஈரோடு மகேஷ் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். அரவிந்த்சாமிக்கு திடீர் லிப்ட் கிடைத்தது போல் இப்படம் கணேஷ் வெங்கட்ராமுக்கு கைதூக்கிவிடும் என்கிறார்கள் ஷூட்டை நேரில் பார்த்த சிலர். கணேஷுக்கு சரி... நமக்கு? கட்டுமஸ்தா ஸ்வேதாமேனன் இருக்காங்கப்பு... அது போதும்!

சிம்புவுடன் 'குத்து', தனுஷுடன் 'பொல்லாதவன்' படங்களில் நடித்தவர் ரம்யா. நடிப்பு மட்டுமின்றி அரசியலிலும் குதித்தார். இரண்டு தினங்களுக்கு முன் அவர் பெங்களூரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். விஷம் அருந்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும் அதற்கு காரணம் கதர்க்கட்சியைச் சேர்ந்த பெரும் புள்ளியின் மகனுடன் ஏற்பட்ட காதல் என்றும் கிசுகிசுக்கிறார்கள். மருத்துவமனை நிர்வாகமோ, 'புட்பாய்சன் பிரச்னை' என்று மூடி மறைக்கிறது.

முருங்கைக்காய் நடிகரின் வாரிசுக்கு சமீபத்தில் வந்த படமும் பேசப்படவில்லை. இந்நிலையில், அவருக்கு பாடகர் ஆகும் ஆசை துளிர்விட்டுள்ளதாம். அண்மையில் சின்னத்திரை நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற 'சாந்த' நடிகரை பாடச் சொல்லிக் கேட்ட நடுவர்கள், 'சாந்தத்தின் குரல் காந்தம் போல் இருக்கிறது' என அள்ளிவிட்டு ஆசையில் நெய் ஊற்றினார்களாம். இதில் உச்சி குளிர்ந்த நடிகர், ஆர்மோனியப் பெட்டியும் கையுமாக திரியாத குறைதானாம்.

## க்ளோசப் லைட்மேன்

www.TheMagnat.com



மலைகா அரோரா கான்

www.TheMagnat.com



# அரசியல் நடிகை தற்கொலை முயற்சி?

www.TheMagnat.com

www.TheMagnat.com



## ஆந்திராவுக்கு கடத்தப்பட்ட

# ஆண்டிப்பட்டி மாணவன்?



கபிலன்

**"பள்ளிக்குச் சென்ற எங்கள் 11 வயது பாலகனை காணவில்லை என்று போலீசில் புகார் கொடுத்தும் கண்டுகொள்ளவில்லை. கடத்தியதற்கான ஆதாரத்தை கண்டுபிடித்துக் கொடுத்தும் பாராமுகம் காட்டுகிறார்கள்" என்று கண்ணீர் வடிக்கிறார்கள் ஏழை தம்பதிகள்.**

மகனை பறிகொடுத்துவிட்டுத் தவிப்பவர்கள் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகா குன்னூரை சேர்ந்த திருப்பதி, பூங்கொடி தம்பதி. காவல் நிலைய படிக்கட்டுகளில் ஏறி இறங்கியவர்கள், நடவடிக்கை இல்லாததால் இப்போது முதல்வரின் தனிப்பிரிவிற்கு கடிதம் எழுதிக் காத்திருக்கின்றனர்.

அந்த ஏழை தம்பதிகளிடம் பேசினோம். "விவசாய கூலிகளான எங்களுக்கு கபிலன், சுபஸ்ரீன்னு இரண்டு பிள்ளைகள். இரண்டு பேருமே தேனியில் ஆறாவதும், மூன்றாவதுமாக படிக்கின்றனர். தினசரி அரசு பேருந்தில்தான் பள்ளிக்குச் சென்று திரும்புவார்கள். அது மாதிரிதான் கடந்த பிப்ரவரி 6-ம் தேதியன்று ஸ்கூலுக்குப் போனாங்க. காலை 11 மணி வாக்கிலே, எங்களுக்கு போன் செய்த வகுப்பு ஆசிரியர் வெங்கடேசன், 'என்னங்க, யாருக்குங்க உடம்பு சரியில்லை? உங்க மகன் லீவு லெட்டர் எழுதிக் கொடுத்துட்டுப் போறானே?' எனக் கேட்க, எங்களுக்கோ ஷாக்! 'என்னன்னு தெரியலையே.. சரி எப்படியும் வீட்டிற்கு வந்துடுவான். வந்ததும் பேசிக்கலாம்' என நினைத்திருந்தோம்.

இரவாகியும் வீட்டிற்கு வரவில்லை. விடிந்தும் விடியாததுமாக தேனி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் கொடுத்தோம். பலனில்லை. அதற்கடுத்த நாள் மாவட்ட எஸ்.பி. ஆபீசில் கம்ப்ளைன்ட் கொடுத்தோம். அதுவும் பலனில்லை" என்று கலங்கினர்.

இந்த விஷயத்தில் காவல்துறை மெத்தனம் காட்டியதால், அக்கம் பக்கத்தார், உறவினரின் துணையோடு 'மகனைக் காணவில்லை' என்று போட்டோவுடன் நோட்டீஸ் அடித்து ஒட்டினர் பெற்றோர்.

அதற்கு கைமேல் பலன் கிடைத்திருக்கிறது. 'அன்று அல்லிநகரத்தைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவன் தனபாண்டி, வீரபத்திரன்கோவில் தெருவைச் சேர்ந்த மும்மூர்த்தி ஆகியோருடன் கபிலனும் பள்ளியருகேயுள்ள சடையாள்கோயிலில் விளையாடிக் கொண்டிருந்ததை பார்த்ததாகவும் அப்போது அந்தக் கோயிலில் இருந்த அரண்மனைப்புதூர் சூரப்புலியும், தேனியைச் சேர்ந்த முத்துப்பாண்டியும் மூவருடன் பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்பள்ளித் தலைமை ஆசிரியர் ராமநாதன் தானாக முன்வந்து கூறினாராம்.

மேலும், ஆந்திராவிற்கு முறுக்குப்பிழிய



www.TheMagnat.com



சி.சி.டி.வி.யில் பதிவான காட்சி

# ஆதாரம் கொடுத்தும் போலீஸ் அலட்சியம்

நாகேந்திரன்

அழைத்துச் சென்றபோது, தாங்கள் இருவரும் எஸ்கேப்பாகிவிட, கபிலனை மட்டும் முத்துப்பாண்டி இழுத்துச் சென்றதாக தனபாண்டியும் மும்மூர்த்தியும் கூறியதாக சொல்லியிருக்கிறார். அதுபற்றி தேனி போலீசில் கூற, அரண்மனைப்புதூர் சூரப்புலியை மட்டும் விசாரித்துவிட்டு அனுப்பியிருக்கின்றது போலீஸ்.

இதுபற்றி கபிலனின் பாட்டி மீனாட்சி கூறுகையில், "போலீஸ் கைவிட்டாலும் காணாம போனது எங்க வாரிசாச்சே. அதனால நாங்களே விசாரிக்க ஆரம்பிச்சோம். முத்துப்பாண்டிக்கு பல்லுல கறை இருக்கும், கையில தீக்காய தழும்பு இருக்கும். அதுபோக ஒரு கால சாய்ச்சு சாய்ச்சுத்தான் நடப்பான். இதுபோன்ற தகவல்களை வைத்துத் தேடினோம். அதுக்கு நல்ல பலன் கிடைச்சுது. பாரஸ்ட் ரோட்ல உள்ள கேமராவுல முத்துப்பாண்டிய போலவே ஒரு ஆளு என் பேரன் கபிலனை கூட்டிட்டுப் போறது மாதிரியான படம் பதிவாகி இருந்துச்சி. அத ஆதாரமா எடுத்துகிட்டு மறுபடியும் எஸ்.பி. ஆபீசுக்குப் போனோம். ஆனா அதையும் அவங்க கண்டுக்கல. அவங்களாவும் கண்டுபிடிக்க மாட்டேங்கிறாங்க. நாம கண்டுபிடிச்சு சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறாங்க. ஏற்கனவே இங்க தேனி, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி பகுதிகளில் குழந்தைகள் காணாமல் போய் பிணமாகத்தான் மீட்டுருக்காங்க. அதனாலதான் முதல்வருக்கும் தபால் போட்டிருக்கோம். எங்களுக்கு எங்க பேரன் முக்கியமுங்க" என்றார் கறாராக.



ஆறுமுகம்

பிரச்னையை கையிலெடுத்திருக்கும் சமூகநீதி அமைப்பின் செயல்பாட்டின் இயக்குநரான ஆறுமுகம், "கொத்தடிமை தொழில் செய்ய இங்கிருந்து மற்ற மாநிலங்களுக்குச் செல்பவர்களில் தேனி மாவட்டத்தினர்தான் அதிகம் என்கிறது புள்ளி விவரம். பள்ளித் தலைமையாசிரியர் கூற்று, சி.சி.டி.வி. ஆதாரம் இதைவிட வேறு என்ன வேண்டும்? எதற்காக காலம் தாழ்த்துகிறது காவல்துறை? குழந்தை கடத்தல் வழக்குப் பதிவு செய்து கண்டுபிடித்து ஒப்படைக்காவிட்டால் நீதிமன்றம்தான் தலையிட வேண்டும்" என்றார்.

இதுகுறித்து தேனி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்திற்குளத் தொடர்பு கொண்டு விவரத்தைக் கூறி கேட்டோம். கவனமாக காதில் வாங்கிக்கொண்டவர்கள், பதிலேதும் சொல்லாமல் தவிர்த்தனர்.

நடவடிக்கை எடுக்க என்ன தயக்கம்? யார் உத்தரவுக்காகக் காத்திருக்கிறார்கள்? இதுதான் 'காவல்துறை உங்களின் நண்பன்' என்பதற்கு அர்த்தமா? ■



மீனாட்சியுடன் பூங்கொடி

www.TheMagnat.com



**"என்னை காதலித்து ஏமாற்றிவிட்டு, வேறொரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டியிருக்கும் காதலனுக்கு எதிராக 6 ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வரும் பெண் போலீசான எனக்கே நீதி கிடைக்கவில்லை. இதில், சாதாரண பெண்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்" என்று குமுறுகிறார் பெண் போலீஸ் ராஜேஸ்வரி.**

தர்மபுரி மாவட்டம் பொம்மிடி பயர்நத்தம் பகுதியைச் சேர்ந்தவர் ராஜேஸ்வரி. கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கான்ஸ்டபிளாக பணியாற்றி வருகிறார். இவர் 2008-ல் கிருஷ்ணகிரியில் ஆயுதப்படை போலீசாக பணியாற்றியபோது, அரூரைச் சேர்ந்த பிரபு என்கிற மலர்செல்வனும் அங்கு பணி புரிந்தார். (இவர் தற்போது தர்மபுரி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் கிரேடு ஒன் போலீஸ்காரராக பணி புரிந்து வருகிறார்.) அப்போது, அவர்களுக்குள் ஏற்பட்ட அறிமுகம் கனிந்து காதலாக மலர்ந்தது.

குந்தாரப்பள்ளி காவலர் குடியிருப்பில் இருவருக்கும் ஒதுக்கப்பட்ட வீடுகளும் அருகிலேயே இருந்ததால் தொடர்பு மேலும் நெருக்கமானது. இருவரும் தாலி கட்டாமலேயே தம்பதியராக வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், திடீரென ராஜேஸ்வரியுடனான நெருக்கத்தை மலர்செல்வன் குறைத்து கொண்டாராம். ஒரு கட்டத்தில் ராஜேஸ்வரியை பார்ப்பதையே தவிர்க்கத் தொடங்கினார்.

இதனால் ஆத்திரமடைந்த ராஜேஸ்வரி, தன்னை நம்ப வைத்து தனது வாழ்க்கையை சூறையாடிவிட்டு திருமணம் செய்யாமல் ஏமாற்றப் பார்ப்பதாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மலர்செல்வன் மீது போலீசில் புகார் செய்தார். இதையடுத்து, மலர்செல்வன் கைது செய்யப்பட்டார். எனினும், இந்த வழக்கில் அவர் விடுதலை ஆனார். அதன் பிறகும் அவரை திருமணம் செய்ய ராஜேஸ்வரி தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். இதற்காக பல போராட்டங்களையும் நடத்தினார். ஆனால், எதற்கும் மலர்செல்வன் மசியவில்லை.

இந்த நிலையில், ஒசூரைச் சேர்ந்த மோகனப்பிரியா என்கிற அபிநயா என்பவருக்கும் மலர்செல்வனுக்கும் திருமணம் பேசி முடிக்கப்பட்டது. இத்தகவல் ராஜேஸ்வரிக்கு தெரியவரவே, நேராக அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்று அவரது பெற்றோரிடம் மலர்செல்வன் தன்னுடன் வாழ்ந்ததற்கான ஆதாரங்களைத் தந்தார். ஆனால், இதையெல்லாம் ஒரு பொருட்டாக நினைக்காத பெண் வீட்டார், மார்ச் 9-ம் தேதி திருப்பதி கோயிலில் வைத்து திருமணத்தை நடத்தி முடித்து விட்டனர்.

திருமணத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த மலர்செல்வன், அரூரில் 12-ம் தேதி திருமண




தாயுடன் போராட்டம் நடத்திய ராஜேஸ்வரி

www.TheMagnat.com

வை.கதிரவன்

# "பெண் போலீசுக்கே நீதி கிடைக்கவில்லை!"

வரவேற்பை நடத்த இருப்பதாக அழைப்பிதழ் அச்சிட்டு நண்பர்களுக்கு விநியோகித்துள்ளார். இந்த விஷயம் ராஜேஸ்வரிக்குத் தெரியவரவே, கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மலர்செல்வன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மீண்டும் புகார் கொடுத்தார். ஆனால், ஏற்கனவே இதேபோன்ற புகாரில் மலர்செல்வன் கைது செய்யப்பட்டதையும் அந்த வழக்கில் அவர் விடுதலையானதையும் அறிந்த போலீசார், அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இதையடுத்து, வரவேற்பு விழா நடந்த திருமண மண்டபத்துக்கு தனது குடும்பத்தினருடன் வந்த ராஜேஸ்வரி, அந்த மண்டபத்தின் முன்பு அமர்ந்து நீதி கேட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். மேலும், தன்னை ஏமாற்றி விட்டு வேறொரு பெண்ணை திருமணம் செய்த மலர்செல்வன் மீதும் அவருடைய குடும்பத்தினர் மீதும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அறவழி மற்றும் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக குறிப்பிட்டிருந்த பேனருடன் போராட்டத்தில் ஈடுபட்டார்.

தகவலறிந்த அரூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜாபர் உசேன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ராஜேஸ்வரியிடம் பேச்சுவார்த்தை நடத்தி, கலைந்து போகச் செய்தார். இந்த பிரச்னையால் திருமண வரவேற்பை பாதியிலேயே முடித்துக் கொண்ட மலர்செல்வன், தனது புது மனைவியுடன் மண்டபத்தின் பின்வாசல் வழியாக வெளியேறிச் சென்றார். இதுகுறித்து மலர்செல்வனின் கருத்தையறிய நாம் மேற்கொண்ட முயற்சிகள் பலனிக்கவில்லை.



மலர்செல்வன்

பின்னர், பெண் போலீஸ் ராஜேஸ்வரியிடம் பேசினோம். "நான் மலைசாதிப் பெண் என்பதை காரணம் காட்டி என்னை திருமணம் செய்யாமல் தவிர்த்து விட்டார் மலர்செல்வன். ஆனால், நான் அவரையே திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து காட்டுவது என்ற வைராக்கியத்தில் 2012-லிருந்து தொடர்ந்து போராடி வருகிறேன். காவல் துறையில் பணியாற்றும் எனக்கே 6 வருடங்களாக போராடியும் நீதி கிடைக்கவில்லை. இதில், சாதாரணப் பெண்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும்? என்னை ஏமாற்றிய கயவனுக்கு எதிரான போராட்டத்தை நான் தொடர்வேன், வெல்வேன். அந்த நம்பிக்கையை நான் இழக்கவில்லை" என்றார் உறுதியான குரலில்.

**படங்கள்: ஆகாஷ்**



www.TheMagnat.com


# 'நாலு கழுதைகளும் காலியாகும் நொய்யலாறும்!'

'பசுமைக்கு மாறுவோம்' எனும் மாற்று சிந்தனையோடு தேசமே போய்க்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம்... எரிபொருள் விலை விண்ணை முட்டினாலும் வாகனப் புகையால் காற்று மாசுபடுகிறது! அதனாலேயே குறைந்த தூரங்களுக்கு பழைய பாணியில் பயணிப்போம் என கேரள, கர்நாடக கிராமங்களில் மீண்டும் மாட்டு வண்டியில் சவாரி செய்ய ஆரம்பிச்சுட்டாங்க. இங்கே தமிழ்நாட்டில்கூட மீண்டும் கழுதையைப் பயன்படுத்த ஆரம்பிச்சுட்டாங்க. ஆனால் அது திருட்டு வேலைக்கு என்பதுதான் அதிர்ச்சிகரமான உண்மை.

எங்கே இந்த அசிங்கம்? கோவை மாவட்ட ஜீவநதியான நொய்யலாற்றிலிருந்து மணலை பெரிய பெரிய சைஸ் பைகளில் அள்ளி, கழுதைகளின் முதுகில் வைத்துக் கடத்தி கொண்டிருக்கிறார்கள். பொதிசுமக்கும் கழுதைக்கு தெரியுமா கடத்தலுக்குத் துணை போகிறோம் என்று? கொஞ்சம்கூட அசராமல் ஒரு நாளைக்கு பல டிரிப் அடிக்கின்றனவாம். சல்லிக்காசு செலவில்லாமல் மாதத்திற்கு லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறதாம் கடத்தல் டீம்.

செம்மேடு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மெயின் ரோட்டில் கழுதைகளை நடத்தி வராமல் உள் கிராமச் சாலைகளின் வழியே இந்தக் கடத்தல் நடக்கிறது. சமூக அக்கறை கொண்ட பெரியவர்கள் இதுபற்றிக் கேட்டால் 'உன் வாய மூடுய்யா. கவருமெண்டு கட்டட வேலைக்குத்தான் இது போகுது. உன் இஷ்டத்துக்கு கடத்தல் கிடத்தல்னு பேசாத' என்று கழுதை டிரைவர்களிடமிருந்து கறார் பதில் வந்து விழுகிறதாம். இங்கே நாள்தோறும் கழுதைகளை வைத்து நடத்தும் இந்த கடத்தல் விவகாரம் ஊர் தலையாரிக்கும் சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனுக்கும் தெரியாமலா இருக்கும்!

_ கோமதிசங்கர்



www.TheMagnat.com



# விவசாயிகளுக்கு 'ஷாக்' கொடுக்கும் தனியார் மின் நிலையம்!

தூத்துக்குடியில் இருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது மேலமருதூர் கிராமம். இங்கு 'கோஸ்டல் எனர்ஜன் பிரைவேட் லிமிடெட்' என்ற நிறுவனம் நிலக்கரி மூலம் மின்சாரம் தயாரிக்கும் அனல் மின் நிலையத்தைத் தொடங்கியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் எட்டையாபுரம் அருகேயுள்ள துணைமின் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மதுரை செக்கானூரணிக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இப்படி மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்காக மேற்படி அனல்மின் நிலைய நிர்வாகத்தினர், கிராமப்புற விவசாயிகளின் அனுமதி இல்லாமல் மரங்களை வெட்டிச் சாய்த்தும் விவசாய நிலங்களை அழித்தும் வருகின்றனராம். இதற்கு அந்த நிறுவனத்தினர் எந்தவித இழப்பீடும் தருவதில்லையாம். இப்படித்தான் காட்டுநாயக்கன்பட்டியை சேர்ந்த பொன்மாரியப்பன் என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் இருந்த 60 பனைமரங்களை, அவரது அனுமதி இல்லாமல் வெட்டி வீழ்த்தி விட்டனராம்.



பொன்மாரியப்பன்

இது குறித்து பொன்மாரியப்பனிடம் கேட்டோம். "எனது நிலத்தில் 60 பனைமரங்கள் இருந்தன. இதில் 10 பனைமரங்களை பிடுங்க அனல்மின் நிலைய நிர்வாகத்தினர் அனுமதி கேட்டனர். ஒரு பனைக்கு 20,000 தர சம்மதித்தால் பிடுங்கிக்கொள்ளும்படி சொன்னேன். சரி என்று சொன்னவர்கள், மொத்த பனைமரங்களையும் பிடுங்கி விட்டனர்.

இதை நான் தட்டிக் கேட்டதற்கு, 'உங்களுக்கு பணம் தானே வேண்டும். வாங்க பேசுவோம்' என்றார்கள். சரின்னு போனா சும்மாவே அலைய விட்டாங்க. போலீசில் புகார் கொடுத்தேன். அவங்க நிறுவனத்துக்கு துணையா இருந்தாங்க. எஸ்.பி., கலெக்டர்னு மனு கொடுத்தேன். உடனே, உள்ளூர் ரவுடிகளை ஏவிவிட்டு என்னை மிரட்ட தொடங்கி விட்டனர். இனிமேல் இவர்களிடம் கேட்டு பயனில்லைனு தான் கோர்ட்டுக்குப் போனேன்" என்றார்.

இதற்கு 'கோஸ்டல் எனர்ஜன் பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் என்ன சொல்கிறது? நிறுவனத்தின் புராஜெக்ட் மேனேஜர் செல்வராஜிடம் கேட்டோம். "ஒரு பனைக்கு 3,000 மூலம் 5,000 வரை மட்டுமே அரசு இழப்பீட்டு தொகை நிர்ணயித்திருக்கிறது. அதைக் கொடுக்க நாங்கள் தயார். ஆனால், அவரோ மொத்தமாக ஒன்றரை லட்சம் ரூபாய் கேட்கிறார். சரி பேசுவோம் என்றோம். ஆனால், அவசரப்பட்டு கோர்ட்டுக்குப் போய்விட்டார். கோர்ட்டில் வழக்கு இருப்பதால் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மற்றபடி ரவுடிகளை வைத்து மிரட்டுவதாக சொல்வதெல்லாம் அபாண்டம்" என்கிறார்.

படங்கள்: மாரிராஜா

## நியூஸ் பெஞ்ச்



www.TheMagnat.com

# தந்தைக்கு மறைமுக குடைச்சல் தருகிறாரா கீதாஜீவன்?



⏭ இசக்கிராஜாவின் போஸ்டர்



⏭ ஜோயலின் போஸ்டர்

**தூ**த்துக்குடி மாவட்ட தி.மு.க.வில் பெரியசாமியை மீறி யார் அரசியல் செய்தாலும் தலைமையால் அடக்கி வைக்கப்படுவர் என்பது எழுதப்படாத விதி. ஆனால் அவரின் மகளே மறைமுகமாக தந்தைக்கு குடைச்சல் கொடுப்பதாகவே கதைக்கிறார்கள் தி.மு.க.வினர். மார்ச் 11-ம் தேதி நெல்லையில் நடந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டுக்கு வருகை தந்த தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின், ராமேஸ்வரம் சென்றுவிட்டு தூத்துக்குடி வழியாக நெல்லை சென்றார்.

இதனையறிந்த மாநில தி.மு.க. இளைஞரணி துணை செயலாளர் ஜோயல், 'செந்தமிழ் நாட்டின் செயல் முதல்வரே' என்ற வாசகத்துடன் கருணாநிதி, ஸ்டாலின் படம் பொறித்த மெகா சைஸ் போஸ்டரை அவசரம் அவசரமாக அடித்து சாலை இருமருங்கிலும் உள்ள சுவர்களில் ஒட்டிவிட்டார். உடனே களமிறங்கிய கீதாஜீவன் ஆதரவாளரும் மாவட்ட பிரதிநிதியுமான இசக்கிராஜா என்பவர் தன் பங்குக்கு போஸ்டர் ஒட்டினார். அந்த போஸ்டரில் பெரியசாமி படம் இல்லை. அதற்குப் பதிலாக கீதாஜீவன் படம் இருந்தது. ஏற்கனவே அப்பாவுக்கும் மகளுக்கும் புகைச்சல் என்றொரு பேச்சு இருக்கும்நிலையில் இந்த போஸ்டர் அதற்கு தூபம் போட்டது.

இதுபற்றி கீதாஜீவனிடம் கேட்டோம். "நான் அந்த போஸ்டரைப் பார்க்கவில்லையே... இசக்கிராஜா அப்பாவின் ஆதரவாளர்தான். எனக்கும் ஆதரவாளர்தான். பிறகு ஏன் அப்படி போஸ்டர் அடித்தார் என்று தெரியவில்லையே... விசாரிக்கிறேன்" என்றார். பிரதான சாலையில் ஒட்டப்பட்ட போஸ்டரை கீதாஜீவன் பார்க்கவில்லை என்பதை நம்ப முடியவில்லை என்பதே தூத்துக்குடி தி.மு.க.வினரின் ஒட்டுமொத்த கருத்தாக இருக்கிறது.



www.TheMagnat.com

- எஸ்.ஏ.துரை, படங்கள்: மாரிராஜா

# 'ஒரு நர்ஸிடம் மூன்று ஓநாய்கள்!'

**நா**கை மாவட்டம் வேதாரண்யம் அரசு மருத்துவமனை வாசலில் சில தினங்களுக்கு முன்பு இரவு 11.30 மணியளவில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து தள்ளாடியபடி இறங்கிய இரண்டு பேர் உள்ளே சென்று இரவுப் பணியில் இருந்த ஒரு நர்ஸிடம், 'டாக்டர் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லை. காரில் இருக்கிறார். நீங்கள் வந்து சிகிச்சை அளிக்க வேண்டும்' என்று அழைத்திருக்கின்றனர். இதனை நம்பி வந்த நர்ஸை காருக்குள் தள்ளி கதவை சாத்திவிட்டு நர்ஸிடம் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த மருத்துவமனை ஊழியர்கள், அக்கம்பக்கத்து பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் மூவரையும் பிடித்துச் சென்று வழக்கு பதிவு செய்தனர். அதில் என்ன சுவாரஸ்யம் என்றால், 'பாலியல் பலாத்காரம்' என்பதை மறைத்து 'இரவு நேரத்தில் நர்ஸை பணிசெய்ய விடாமல் தடுத்ததாக' என்று வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட்டிருப்பதுதான்.

போதையில் பேதையை நாடி வந்தவர்களில் ஒருவரான டாக்டர், அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவராம். மற்றொருவர் சமீபத்தில் தே.மு.தி.க.விலிருந்து தி.மு.க.விற்கு தாவியவர். அவரின் நண்பர் என மூவரும் இரவு நேரத்தில் சரக்கு ஏற்றிக்கொண்டு ஏதாவது ஒரு பெண்ணிடம் தங்கள் கைவரிசையைக் காட்டுவது வழக்கமாம். குறிப்பாக கடைசி பேருந்தை தவறவிட்டு பஸ்நிலையத்தில் தஞ்சமடைந்திருக்கும் பெண்கள்தான் இவர்களின் குறியாம். இவர்களுக்கு மேற்படி அரசு மருத்துவமனை நர்ஸின் மீது நீண்ட நாட்களாகவே ஒரு கண்ணாம். தங்களின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக்கொள்ளவே டாக்டரின் துணையோடு முயன்று கைதாகியிருக்கின்றனர்.

தற்போது மனஉளைச்சலில் இருக்கும் அந்த நர்ஸ் விடுப்பில் சென்றுவிட, அவரின் உறவினர்கள் தீரா கோபத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதையொட்டி சில தினங்களில் அசம்பாவிதங்கள் அரங்கேறினாலும் ஆச்சரியமில்லை என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள். விபரீதம் நிகழ்வதற்குள் உயர் அதிகாரிகள் விழித்துக்கொள்வார்களா?

- ஆர்.வி.ஆனந்தன்



நியூஸ் பெஞ்ச்

www.TheMagnat.com



www.TheMagnat.com

சேலம்

மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா மற்றும் அண்மையில் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் 69-வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் சேலம் பேருந்து நிலையம் அருகிலுள்ள போஸ் மைதானத்தில் மார்ச் 14-ம் தேதி நடைபெற்றது.

தமிழக முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி பதவியேற்ற பிறகு அவரது சொந்த மாவட்டமான சேலத்தில்



⏭ எடப்பாடி பழனிச்சாமி

# மீண்டும் மாவட்ட அரசியல்! எ(ட)ப்ப(ா)டி பழனிச்சாமி?



www.TheMagnat.com

அவர் பங்கேற்கும் இரண்டாவது கூட்டம் இது. ஏற்கனவே, மார்ச் 7-ம் தேதி அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அவர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

ஆனால், அப்போதைய சூழலில் அவருக்கு தொண்டர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்க முடியவில்லை. இதனால் மனவருத்தத்தில் இருந்த தொண்டர்கள், அடுத்தமுறை எடப்பாடி பழனிச்சாமி வரும்போது அசத்திவிடுவது என்ற முடிவில் இருந்தனர். எனவே, பொதுக்கூட்டத்திற்கு ஏராளமான கூட்டத்தைக் கூட்டி எடப்பாடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க திட்டமிட்டிருந்தனர்.

எனவே, பொதுக்கூட்டத்தில் இலவச புடவைக்கான டோக்கன் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனால், சேலம் மற்றும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த பெண்கள் போஸ் மைதானத்திற்கு படையெடுத்தனர். அதேசமயம், கிராமப்புறங்களில் இருந்து



⏭ செம்மலை

பல்லாயிரக்கணக்கான பெண்கள் லாரிகளில் ஏற்றப்பட்டு கூட்டம் நடக்குமிடமான போஸ் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதனால், நடப்பது மகளிரணி மாநாடா? பொதுக்கூட்டமா? என்று வியக்குமளவுக்கு எந்த பக்கம் திரும்பினாலும் பெண்களே தென்பட்டனர். மாலை 6.38 மணிக்கு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய எடப்பாடி பழனிச்சாமி, 6.45 மணியளவில் கூட்டமேடைக்கு வந்து சேர்ந்தார்.

விழாவில், தையல் இயந்திரம், சலவைப்பெட்டி, மூன்று சக்கர சைக்கிள், எவர்சில்வர் குடம், வேட்டி, சேலை என பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி எடப்பாடி பழனிச்சாமி பேசத் தொடங்கினார். அப்போது, நலத்திட்ட உதவிகளை பெற்றவர்களும் புடவை டோக்கன் வாங்கிய பெண்களும் எழுந்து வெளியேறத் தொடங்கினர். இதனால், சுமார் 20 நிமிடங்களில் பாதி

www.TheMagnat.com

சூரஜ்

மைதானமே காலியானது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா காட்டிய வழியிலேயே தனது அரசும் பயணிப்பதாக பேச்சைத் தொடங்கிய எடப்பாடி பழனிச்சாமி, "எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட இயக்கமான அதிமுகவை அவரது மறைவுக்குப் பின் கண்ணின் இமைபோல் கட்டிக் காப்பாற்றியவர் ஜெயலலிதா. அப்படிப்பட்ட கட்சியை திட்டமிட்டு அழிக்க நினைக்கிறது சதிகாரக் கும்பல். அவர்களில் ஒரு சதிகாரர் சேலத்திலேயே இருக்கிறார். அதுவேறு யாருமல்ல, செம்மலைதான்.

1989 அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்தபோது, ஜானகியம்மாள் அணியில் இருந்த செம்மலை, தாரமங்கலத்தில் ஜெயலலிதா





கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்...

உருவப்படத்திற்கு செருப்பு மாலை அணிவித்து ஊர்வலமாக சென்றார். சேலம் புதிய பஸ் நிலையத்தில் ஜெயலலிதாவின் உருவபொம்மையையும் எரித்தார். அப்படிப்பட்ட செம்மலை இப்போது உழைப்பு, விசுவாசம் என்று பேசி வருகிறார். உழைப்பு, விசுவாசத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே அம்மாவின் விசுவாசியாக இருந்த நானே உதாரணம்.

செம்மலை அமைச்சராக இருந்தபோது இந்த மாவட்டத்துக்கு என்ன செய்தார்? சட்டமன்ற உறுப்பினராக இருந்த தொகுதிகளுக்குக்கூட எதையும் செய்யவில்லை. அதனால் எந்த தொகுதியிலும் இரண்டாவது முறையாக தொடர்ந்து போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டு தேர்தலுக்குத் தேர்தல் தொகுதியை மாற்றிக் கொண்டார். ஆனால் நான், தொடர்ந்து ஒரே தொகுதியில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயித்து வருபவன். நடிப்பில் சிவாஜி கணேசனையும் தோற்கச் செய்து விடுவார் செம்மலை" என்று தன்னுடைய பெருமை பற்றியும் செம்மலையை தாக்கிப் பேசுவதிலேயே குறியாக இருந்தார்.

அடுத்த ஓ.பி.எஸ். பக்கம் அட்டாக்கை திருப்பியவர், "1987-ல் அதிமுகவுக்கு வந்த ஓபிஎஸ். இன்றைக்கு கட்சியே தன்னுடையது என்கிறார். 1989 தேர்தலில் அம்மாவுக்கு எதிரணியில் போட்டியிட்டவருக்கு ஏஜென்ட் வேலை பார்த்தார். அம்மாவின் உருவ பொம்மையை எரித்தார். இவரை எப்படி அம்மாவின் விசுவாசியாக ஏற்க முடியும்? அப்படிப்பட்ட பன்னீர்செல்வம் தலைமையில் ஒரு அணியினர் பிரிந்து சென்றுவிட்டார்கள். எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் கட்டிக்காக்கப்பட்ட அ.தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது" என்று முடித்தார்.

கூட்டத்தில் எடப்பாடி பேச்சின் பெரும்பகுதி செம்மலையை பற்றியே இருந்தது. இதனால் கேட்பவர்களுக்கு அது சலிப்பை ஏற்படுத்தியது. மேலும் செம்மலை ஒரு குறிப்பிட்ட மாவட்டம் சார்ந்து அரசியல் செய்பவர். ஆனால், மாநில அரசியல் பற்றிப் பேச வேண்டிய அஸ்தஸ்தில் இருக்கும் எடப்பாடி பழனிசாமி, ஓபிஎஸ். பற்றி கடுமையாக விமர்சித்திருந்தாலோ, ஸ்டாலினை விமர்சித்திருந்தாலோ பேச்சு களைகட்டியிருக்கும். ஆனால் செம்மலையைப் பற்றி பேசியது அவர் இன்னும் மாவட்ட அரசியலிலேயே இருப்பதை உணர்த்தியது.

**படங்கள்: ஆகாஷ்**

www.TheMagnat.com

# குடிமகன் வயிற்றில் பீர்... குடும்பத்தார் வயிற்றில் பால்!






விரும்பிய பதவி கிடைத்து விருப்பத்திற்கு மாறான நிகழ்வுகள் நடைபெறவில்லை யென்றால் எவரும் அணிமாற ஆசைப்பட மாட்டார். அதிகாரம் இருந்தும் ஆற்றாமை களைதல் இயலாததாகவே தம் பணி தொடரும்போது, அணி தாவுவது தவிர்க்க இயலாத ஒன்று என்ற தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் மனக்குமுறல் விரைவில் வெளிப்படும்.

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், வள்ளியூர்.



'சிலருக்கு பட்டா சிலருக்கு கொட்டாவி' என்ற ஐ.பி.எஸ். அதிகாரிகள் மனக்குமுறலை படித்தேன். காவல்துறையில் இது சகஜமப்பா! அந்நாளிலேயே எழுத்தாளர், நடிகர், வசனகர்த்தா, ஆன்மிகவாதி, சட்ட வல்லுநர் என்று பன்முக திறமை கொண்ட மிகவும் மூத்த காவல் துறை அதிகாரியான அமரர் பொன்.பரமகுருவுக்கு பெயரளவுக்குத்தான் காவல் துறை தலைவர் பதவி தரப்பட்டதே தவிர, பிற்பட்டோர் நல வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டார்! காவல் துறைப்பணி முடிந்து பிரிவு உபசார நிகழ்வின் போதும்கூட அவருக்கு முறைப்படி அணிவகுப்பு மரியாதை தரப்படவில்லை என்பது மிக வருத்தமான விஷயம்.

- வக்கீல் பி.எஸ்.மஞ்சுநாத், திருக்காட்டுப்பள்ளி.



தவறு செய்த அதிகாரியை மாறுதல் செய்ய வேண்டும் என்று கேட்டபோது, மாறுதல் செய்தால் அந்த ஊரையும் கெடுத்துவிடுவார். ஆகவே, இங்கேயே வைத்துத் திருத்த முயற்சிப்போம், திருந்தவில்லையெனில் தண்டனை கொடுப்போம் என்று சொன்ன முதலமைச்சர்கள் ஆண்ட தமிழ்நாட்டில், தவறு செய்வதற்காகவே தம்மோடு வைத்துக்கொள்வதும், திருத்தம் சொல்பவர்களைத் திட்டமிட்டு பழிவாங்குவதுமான நிலை மாறவேண்டும். மேலும் ரிட்டயர்டு ஆனவர்களுக்கு எக்ஸ்டென்சன் கொடுப்பது, டயர்டே ஆகாதவர்களுக்கு டென்சன் கொடுப்பது ஆகும்.

- வி.கார்மேகம், தேவகோட்டை.




'சீறிய தீபா... முறைத்த மாதவன்' படித்தேன்! அங்கு பிரியங்காவுக்கு ஒரு ராபர்ட் வதேரா! இங்கு தீபாவுக்கு ஒரு மாதவன்! பொதுவாக அரசியலில் தீவிரமாக ஈடுபடுபவர்களின் கணவர்கள் மதிக்கப்படுவதில்லை என்பதே நிதர்சன உண்மை! காலத்தில் கரைந்து காணாமல் போய்விடுகிறார்கள்! இந்திரா காந்தி கணவர் பெரோஸ்கான் (காந்தி) தொடங்கி நீண்டுவரும் இந்த அத்தியாயம் இன்னமும் தொடர்கிறது.

- பிரம்ம வித்யா, பழமார்நேரி.



காந்தியின் 'உண்ணாவிரதம்' அஹிம்சை போராட்டத்தின் வலிமையான ஆயுதம்! பொதுமக்களை 'ஹிம்சை' செய்யும் 'அட்டகத்தி'தான் திராவிட கட்சிகளின் உண்ணாவிரதம். 'மூத்த தலைவர்' வகுத்துத் தந்த இந்த சடங்குக்கு உண்ணாமல் உண்ணும் விரதம் என்று பெயரிடலாமே! ஏனென்றால், ரகசிய லஞ்ச் பிரேக் உண்டாம்! அதான்!

- கே.எஸ்.குமார், விழுப்புரம்.




அன்பழகனின் திகில் பேச்சு வயிற்றில் புளியை கரைத்து விட்டது. மார்ச் 16-ல் சபாநாயகர் தாக்கப்படுகிறாரா, இல்லை முதல்வர் அடிவாங்குகிறாரா, இல்லை சட்டையை கிழித்து கொண்டு ஸ்டாலின் போன மாதிரி இப்போது ஸ்டாலின் தலைவிரிகோலமாக ஒப்பாரி வைக்கப் போகின்றாரோ? நினைக்கவே பயமாக இருக்கிறது. எதற்கும் துணை ராணுவம் தயாராக இருப்பது நல்லது.

- லட்சுமி செங்குட்டுவன், வேலூர்.



www.TheMagnat.com



**பெ**ட்ரோல், டீசல் விலை உயர்வின் காரணம் டாஸ்மாக் கடைகளை மூடுவதால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பினும் விலைவாசி உயர்வை அரசு கொஞ்சம் எண்ணிப் பார்த்து தொழிலதிபர்களுக்கு அரசு கொடுக்கும் சலுகைகளைக் குறைத்து, அவர்களின் நியாயமான வரியை நிர்ப்பந்தப்படுத்தினாலே போதும் என்கிற ஆலோசனை ரியலி கிரேட்! குடிமகன்களின் அடிவயிற்றில் பீருக்கு பதில் அவங்க குடும்பத்தாரின் வயிற்றில் பாலை ஊத்தலாமே!

- ப.இசக்கிபாண்டியன், திருநெல்வேலி.



**க**ருணாநிதி கற்றுக் கொடுத்த வித்தைகளை கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கச்சிதமாக செய்து முடித்த தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் கடமையுணர்ச்சியை முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கும் ஜெ.அன்பழகனின் திகில் பேச்சு வெளிச்சத்திற்கு கொண்டுவந்து விட்டது. தி.மு.க. எம்.எல்.ஏ., தங்களின் 'கண்ணிய'த்தைக் காண்பித்து 'கட்டுப்பாட்டோடு' செய்ததையும் இதற்கு மேலும் செய்ய முடியும் என்பதையும் சவாலாகவே விடுத்துள்ள அவரது பேச்சு அண்ணா உருவாக்கிய தி.மு.க.வா இது? என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

- எஸ்.ராஜகணேஷ், தலைஞாயிறு.



**மீ**னவர் பலி என்பது சாதாரண விஷயம் அல்ல. கால்நடைகள் ஆடு, கோழி போன்றவை அஸ்தமித்து வரும் இக்காலத்தில் நாயையும் எலியையும் உண்ணாமல் இருக்க ஒரே வடிகால்தான் கடல் உணவுகள். அதை இழக்கும் நிலை என்பது சமுதாயத்தில் மிகப்பெரிய தாக்குதல்களை நிகழ்த்திவிடும். மேலும் மத்திய, மாநில அரசுகளின் போக்கு தேசப்பாதுகாப்பிலும் எதிரி நாடுகளுக்கு இளக்காரமாகிவிடும். வெளிநாட்டு இந்தியப் பிரஜைக்கு பல லட்சம் செலவில் தனி விமானத்தில் அனுப்பி மருத்துவம் பார்க்கும் அரசு பலநூறு பேரின் சாவில் அக்கறை காட்டாதது மிகமிக மோசமான அடிமைத்தனம்.

- ஏ.ஆர்.நாகராஜன், சென்னை.



**'இ**துவே இறுதி சாவாக இருக்கட்டும்' தமிழக மீனவர்களின் சோகத்தை சொல்லியது. இலங்கை அரசின் அட்டூழியங்கள் தொடர் கதையாகிறது. தமிழ் மீனவர்களும் இந்தியர்கள் என்ற உணர்வு மைய அரசுக்கு இல்லையா? உலகம் முழுவதும் சுற்றி இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பதாகச் சொல்லும் பாரத பிரதமருக்கு இதில் உறுதியான முடிவெடுக்க இன்னும் எத்தனை நாள் அவகாசம் தருவது? விரைந்து செயல்பட்டு மைய அரசு உடன் தமிழ் மீனவர்களை காக்கட்டும்.

- டி.சந்திரன், ஈரோடு.

**ப**ள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மதிய உணவுக்கு ஆதார் அட்டை கட்டாயம் தேவை என்று அரசாங்கம் சொல்லுவதுபோல ஹோட்டலில் சாப்பிட வந்தவர்கள் சர்வர்கிட்டே சவுண்டு விட்டா அவரும் ஆதார் அட்டை கேட்கப்போறார் என்பது போல கார்ட்டூன் படம் அமைந்திருந்தது.



- சு.ஆறுமுகம், கமுகுமலை.


குமுதம் ரிப்போர்ட்டர்

நிகழ்காலத்தின் குரல்

துணிவு தெளிவு நேர்மை

■

நிறுவிய ஆசிரியர்
எஸ்.ஏ.பி.

நிறுவிய பதிப்பாளர்
பி.வி. பார்த்தசாரதி

சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர்
பா. வரதராசன்

அச்சிட்டு வெளியிடுபவர்
பா. வரதராசன்

இணை ஆசிரியர் *
க. குபேந்திரன்

செய்தி ஆசிரியர்
ஜான் வில்கின்ஸ்

உதவி ஆசிரியர்
ஜி. ரமேஷ்

சீனியர் நிருபர்கள்
அ.துரைசாமி,
வை. கதிரவன், ச. செல்வராஜ்,
எஸ். அண்ணாதுரை,
ஆர்.விவேக் ஆனந்தன்,
ஏ.முகமது ரஃபி

நிருபர்
எஸ்.ஷக்தி

மூத்த புகைப்படக்காரர்
ம.செந்தில்நாதன்

புகைப்படக்காரர்
ஞானமணி

குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்,
பழைய எண்.151, புதிய எண்.306,
புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல்
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.
தபால் பெட்டி எண்: 2592,
சென்னை - 600 031.

ஃபேக்ஸ் எண் : 26425041
தொலைபேசி எண் : 26422148
இ-மெயில் முகவரி: kumudamreporter@gmail.com

* இந்த இதழில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் இணை ஆசிரியர் பொறுப்பாவார்.

www.TheMagnat.com



# “பனியன், ஜட்டி துவைக்க சங்கப் பணமா?”

பாலும் தண்ணீரும் போல திரைத்துறைக்கும் பிரச்னைக்கும் அப்படியொரு பிணைப்பு. நடிகர் சங்க கட்டடப் பிரச்னையில் தொடங்கி, தயாரிப்பாளர் சங்கத் தேர்தல் உள்குத்து, சுசித்ரா 'லீக்ஸ்' என சுற்றிச் சுழன்றடித்து வந்த சூறாவளி, தற்போது 'கில்டு' எனப்படும் தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் சங்கத்தில் வந்து நிற்கிறது.


1986-ல் தொடங்கப்பட்ட இச்சங்கத்தில் சுமார் 3,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். சுமார் 12 வருடங்களுக்கும் மேலாக முக்கிய பொறுப்பில் இருந்த கிரிதாரிலால் நாக்பால் மற்றும் தேவராஜ் குணசேகரன் இருவரும் சேர்ந்து பல லட்ச ரூபாயை ஏப்பம் விட்டதாக சென்னை மாம்பலம் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. போலீசாரும் மேற்கண்ட இருவர் மீதும் கிரிமினல் வழக்குப் பதிவு செய்து வலைவீசி தேடி வருகின்றனர்.

இத்தகவல் நமக்குத் தெரிய வரவே விசாரணைக் களத்தில் குதித்தோம். இதுகுறித்து மூத்த 'ஸ்டன்ட்' மாஸ்டரும் சங்கத்தின் செயலாளருமான ஜாக்குவார் தங்கத்திடம் பேசினோம்.

## எகிறும் ஜாக்குவார் தங்கம்



ஜாக்குவார் தங்கம்


www.TheMagnat.com
குமுதம்
மண்வாசனை
மண்: 1 மழை: 4 மாதமிருமுறை
மார்ச் 16 - 31. 2017
உழவு • உணவு • உணர்வு
₹ 10
தற்போது விற்பனையில்...
மாதம்
25 ஆயிரம் வருமானம்!
- கோரைப் புல் விவசாயம்
www.TheMagnat.com
பால் காளான் வளர்ப்பு
ஒருமுறை 5 லட்சம் முதலீடு
ஆண்டிற்கு 6 லட்சம் லாபம்!


www.TheMagnat.com

"இச்சங்கத்தின் செயலாளராக 2013-ல் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது தான், முக்கிய பொறுப்புகளை வகித்து வந்த கிரிதாரிலால் நாக்பால் மற்றும் தேவராஜ் குணசேகரன் ஆகியோர் சங்கப் பணத்தை கூட்டுக் கொள்ளை அடித்த விவரம் தெரிய வந்தது. 2014 ஆண்டுவாக்கில் இவர்களை பற்றிய புகார்கள் என்னிடம் மலைபோல குவியத் தொடங்கியது. பல்வேறு உறுப்பினர்கள் நேரடியாக வந்து சங்கத்தில் நடைபெறும் தில்லுமுல்லுகளை பட்டியலிட்டனர்.

அந்த சமயத்தில், இவர்கள் இருவரும் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்று வந்த விமான டிக்கெட்டிற்கான பில் என்னிடம் கையெழுத்திற்காக வந்தது. விமான டிக்கெட்டை காட்டாமல், என்னால் கையெழுத்திட முடியாது என்று கூறி மறுத்து விட்டேன். அதிலிருந்தே எந்த பில்லையும் என்னிடம் கையெழுத்து பெறுவதற்காக அவர்கள் அனுப்புவதில்லை.

மும்பையை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் இந்திய திரைப்பட சம்மேளனம் வருடத்திற்கு மூன்று கூட்டங்களைத்தான் நடத்தும். ஆனால், இவர்களோ மாதத்திற்கு 4 கூட்டங்களில் கலந்து கொள்வதாகக் கூறி பொய்க்கணக்கு எழுதி லட்சக்கணக்கில் சங்கப்பணத்தைச் சுருட்டியுள்ளனர். இந்த சங்கத்தின் முக்கிய பணியே படத் தலைப்புகளை பதிவு செய்வதும் பாதுகாப்பதும் தான். ஆனால், டைட்டில் பதிவு செய்ய வருபவர்களிடம், இந்த தலைப்பு ஏற்கனவே வேறு ஒருவர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக பொய் சொல்லி, சில லகரங்களை ஏப்பம் விட்டுள்ளனர்.

பதிவு செய்யப்பட்டிருந்த டைட்டில்களை விற்பதும் நடந்துள்ளது. நான் பதிவு செய்திருந்த படத் தலைப்பு ஒன்றையே மற்றொருவருக்கு விற்றுவிட்டு, 'சின்ன விஷயம், விடுங்க!' என்று கூலாக கூறிவிட்டனர். சரவணன் என்கிற சூர்யா, இந்தியா - பாகிஸ்தான் போன்ற பட தலைப்புகளில் இவர்கள் லஞ்சம் பெற்ற விஷயம் வெளியே தெரிந்து சங்கத்திற்கு அவப்பெயராகி விட்டது.



கிரிதாரிலால் நாக்பால்



தேவராஜ் குணசேகரன்

**சங்கத்திற்கு 85 லட்ச ரூபாய் மதிப்புள்ள அப்பார்ட்மெண்ட்டை, 1.40 கோடிக்கு வாங்கியுள்ளனர். இந்த இடத்திற்கு பட்டா கூட இல்லை.**

கடந்தாண்டு இச்சங்கத்திற்கு தி.நகரில் சொந்த கட்டடம் வாங்கியதிலும் நிறைய மோசடிகள் நடைபெற்றுள்ளன. 85 லட்ச ரூபாய் மதிப்புள்ள அப்பார்ட்மெண்ட்டை, 1.40 கோடிக்கு வாங்கியுள்ளனர். இந்த இடத்திற்கு பட்டா கூட இல்லை. இதை புதுப்பிப்பதற்கான செலவாக மேலும் 10 லட்ச ரூபாயை கணக்குக் காட்டி 'ஸ்வாகா' செய்து விட்டார்கள்.

விநாயகர் சதுர்த்தி பூஜைக்கு 3.13 லட்சம் செலவுக் கணக்கு காட்டியுள்ளனர். தேங்காய், பூ, பழம் வாங்குவதற்கு லட்சக் கணக்கில் செலவாகுமா? அதை விடுங்கள், அவர்களின் ஜட்டி, பனியனை துவைப்பதற்கெல்லாம் 30,000 பில் போட்டு பணம் எடுத்துள்ளனர். பெற்ற பிள்ளைகளுக்கு ஒரு வாய் சோறு ஊட்டுவதற்காக ஆயிரக்கணக்கான சினிமா தொழிலாளர்கள் வெயில், மழையென்று பாராமல் நாயாக உழைத்துவரும் வேளையில், இவர்கள் கூத்தடிக்க சங்கப் பணம்தான் கிடைத்ததா? பல மிரட்டல்களை எதிர்கொண்டு தான் விஷயத்தை நீதிமன்றம் வரை கொண்டு சென்று, இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்ய உத்தரவைப் பெற்று வந்துள்ளோம்" என்றார்.

'தற்போது இவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கு வரவிருக்கும் சங்க தேர்தல் காரணமா?' என்றோம். "நிச்சயமாக கிடையாது. நான் செயலாளராக பொறுப்பேற்ற 2014-ம் ஆண்டிலிருந்தே இவர்களின் மோசடிக்கு எதிராக குரல் கொடுத்து வருகிறேன். 2013 - 2014 காலகட்டத்திற்கான கணக்கு வழக்குகளை தணிக்கை செய்ததிலேயே இவ்வளவு முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. விரைவில் சங்க தேர்தல் முடிந்த பிறகு, கணக்குகளை ஆரம்பம் முதல் தணிக்கை செய்ய இருக்கிறோம். அப்போது பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்!" என்றார்.

இந்த குற்றச்சாட்டுகள் குறித்து அவர்களின் கருத்தறிய தொடர்பு கொண்டோம். இருவரது தொலைபேசி எண்களும் 'ஸ்விட்ச் ஆப்' நிலையிலேயே இருந்தன.

**படங்கள்: ம.செந்தில்நாதன்**

www.TheMagnat.com

**இரண்டாம்துக்ளக்**

செய்தி: அ.தி.மு.க.வையோ, தினகரனையோ ஆதரிக்கும் பேச்சுக்கே இடமில்லை! - திருநாவுக்கரசர்

கமெண்ட்: டெல்லியில இருந்து செம டோஸ் விழுந்திருக்கு போல!

**சி.பி.செந்தில்குமார்**

செய்தி: சிதம்பரம் போன்ற திறமையானவர்கள், முதல்வராக வேண்டும்! - இ.வி.கே.எஸ்.

கமெண்ட்: போன மாசம்தானே குஷ்பூ சி.எம். ஆகணும்னீங்க? அது போன மாசம், இப்ப சொல்வது இந்த மாசம்! (மைண்ட்வாய்ஸ்)

**குன்னத்தூர் ஆறுமுகம்**

செய்தி: ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் த.மா.கா. நிலைப்பாடு குறித்து ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படும்! - ஜி.கே.வாசன்

கமெண்ட்: Olx-ல போட்டா, உடனே முடிவை தெரிஞ்சிக்கலாமே!

**அருண்குமார்**

செய்தி: காங்கிரஸ் தமிழக ஆட்சிக் கட்டிலில் வரும்! - குஷ்பூ

கமெண்ட்: தமிழகத்தில் காங்கிரஸ் aunty கட்டுப்பாட்டில் வந்தாலும் வரும்... ஆட்சிக் கட்டிலில் வராது!

**கிறுக்கன் கிருஷ்ணா**

செய்தி: அ.தி.மு.க.வில் எனக்கும் பங்குண்டு! - நடிகை லதா

கமெண்ட்: இது ஒண்ணுதான் பாக்கி இருக்கு போல... எம்.ஜி.ஆர். பொருள்களில் பங்கு பிரிக்க...!

**சி.பி.எஸ்.**

செய்தி: டெலிபோன் எக்சேஞ்ச் முறைகேடு ஏப்ரல் 1-ல் ஆஜராக மாறன் சகோதரர்களுக்கு சி.பி.ஐ. கோர்ட் சம்மன்!

கமெண்ட்: ஆஜர் ஆகாம 'ஐ ஏப்ரல் பூல்'னு சொல்லிடப் போறாங்க!

**வைத்தியநாதன்**

செய்தி: கர்நாடகாவில் ரூ.40-க்கு பதில் 4 லட்சம் ரூபாயை டாக்டரின் அக்கவுண்டில் இருந்து தீட்டிய டோல் பூத்!!

கமெண்ட்: பூஜ்யத்துக்கு மதிப்பில்லைனு சமாளிப்பாங்களோ?

**ஜாலிவுட் ஜான்சன்**

செய்தி: நான் ஆடிய பரதத்தை விமர்சிக்கும் தகுதி யாருக்கும் இல்லை! - ஐஸ்வர்யா தனுஷ்

கமெண்ட்: நீங்க ஆடியது பரதமுங்களா! நான்கூட புதுவகையான உடற்பயிற்சின்னு நெனச்சிட்டேன்!

**ராஜேஸ்**

செய்தி: தரமான படங்களையே ரசிகர்கள் வரவேற்கிறார்கள்! - சூர்யா

கமெண்ட்: அப்ப... சிங்கம் 4 வராதுங்கிறாப்டி!



# ஆன்லைன் ஆப்பு!

www.TheMagnat.com

சேலம்

சேலம் சாமிநாதபுரத்தைச் சேர்ந்த ஜீவானந்தம் - அலமேலு தம்பதியின் மகன் முத்துகிருஷ்ணன். பி.எச்டி. ஆராய்ச்சி படிப்பை டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் படித்து வந்த முத்துகிருஷ்ணன், மார்ச் 13-ம் தேதி முனிர்கா விகார் பகுதியிலுள்ள தனது நண்பரின் அறையில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கினார்.

# டெல்லியில் தமிழனாக இருப்பதும் பிரச்னை... தமிழனில் தலித்தாக இருப்பதும் பிரச்னை!

இத்தகவலை சக மாணவர்கள் தெரிவிக்க, அக்குடும்பமே அனலில் இட்ட புழுவாக துடித்துக்கிடக்கிறது. காரணம், ஜீவானந்தம் - அலமேலு தம்பதிக்கு முத்துகிருஷ்ணன் மட்டுமே ஆண் வாரிசு. மற்ற மூவரும் பெண்கள். மிகவும் ஏழ்மையான குடும்பம். தங்களது துயரங்களுக்கு முத்துகிருஷ்ணனால் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று பெரிதும் நம்பியிருந்த வேளையில் இப்படியொரு இடி அவர்கள் தலையில் இறங்கினால் எப்படி இருக்கும்...

தகவலறிந்த நாம் நடந்ததை அறிந்துகொள்ள களத்தில் இறங்கினோம். மீளாத் துயரத்தில் இருந்த அலமேலுவை தேற்றி பேச வைத்தோம். "ரெண்டு நாளைக்கு முன்னாலகூட என்னிடம் நல்லாத்தானே போனில் பேசினான். அப்பக்கூட தனக்கு கஷ்டம்னோ, சங்கடம்னோ அவன் சொல்லலையே... ஒரே பையங்க, அவன்தான் எங்களுக்கு துணையா இருப்பான்னு நெனச்சோம். இப்படி தவிக்க விட்டுட்டு போயிட்டானே" என்று தலையிலடித்தபடி புலம்பினார்.

ஜீவானந்தமோ, ''தற்கொலை செய்யுமளவுக்கு என் மகன் கோழையல்ல. அவன் இறப்பில் மர்மம் உள்ளது. நீதி விசாரணை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டு வர வேண்டும்'' என்று கூறிவிட்டு மகனின் சடலத்தை பெறுவதற்காக புறப்பட்டு சென்றார்.

முத்துகிருஷ்ணன் மரணத்திற்கு நீதி கேட்டும், தலித் மாணவர்கள் மீது தொடரும் தாக்குதல்கள், வன்கொடுமைகள், மரணங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும், முத்துகிருஷ்ணன் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்க கோரியும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினரும் சேலம் நான்கு ரோடு பகுதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுபற்றி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வடக்கு மாவட்ட செயலாளர் வசந்தன் கூறுகையில், ''அம்பேத்கர் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடுடைய முத்துகிருஷ்ணன், சாதிய சமத்துவத்தை வலியுறுத்துவதாக தனது முகநூல் பக்கத்தில் பல பதிவுகளை பதிவிட்டுள்ளார். 'டெல்லியில் படிக்கும் மாணவர்கள் தமிழனாக இருப்பதும் பிரச்னை; தமிழனுக்குள் தலித்தாக இருப்பது அதைவிட பிரச்னை' என்ற சூழலில் நடந்துள்ள முத்துகிருஷ்ணனின் மரணம் கட்டாயம் சந்தேகத்துக்குரியது"



www.TheMagnat.com





விஜய் அமிர்தராஜ்

என்றார்.

இந்த நிலையில், டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த முத்துகிருஷ்ணனின் சடலத்தை தடயவியல் துறைத் தலைவர் டாக்டர் சுதிர் குப்தா தலைமையிலான ஐந்து மருத்துவர்களை கொண்ட குழு மார்ச் 15-ம் தேதி பிரேத பரிசோதனை செய்தது. பரிசோதனை முடிவில், "தூக்கில் தொங்கியதில் ஏற்பட்ட மூச்சு திணறல் காரணமாகவே முத்துகிருஷ்ணன் உயிரிழந்ததாகவும் தேவைப்பட்டால் விஸ்ரா பரிசோதனையும் மேற்கொள்ளப்படும்" என்றும் தெரிவித்திருந்தனர்.

பிறகு முத்துகிருஷ்ணனின் உடல் டெல்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் சேலத்திற்கு மார்ச் 16-ம் தேதி காலை 6.10 மணிக்கு வந்து சேர்ந்தது. முத்துகிருஷ்ணனின் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக அவரது கல்லூரி நண்பரும் விடுதி ரூம்மேட்டுமான விஜய் அமிர்தராஜ் டெல்லியில் இருந்து சேலம் வந்திருந்தார். அவரிடம் பேசினோம்.

''முத்துகிருஷ்ணன் இறப்புக்கு மன அழுத்தமே காரணம் என்று சொல்லும் போலீஸ், அந்த மன அழுத்தத்திற்கான காரணிகள் யார் என்பதையல்லவா முதலில் கண்டறிந்து சொல்லியிருக்க வேண்டும்? மேலும், மாணவர் இறப்பு தொடர்பாக டெல்லி பல்கலைக்கழக துணைவேந்தர் இதுவரை எந்தவிதமான அறிக்கையும் வெளியிடவில்லை.



ஜீவானந்தம்



அலமேலு

இதே பல்கலைக்கழகத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நஜீப் என்ற மாணவர் காணாமல் போனார். அதற்குக் காரணமானவர்கள் மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கெல்லாம் பல்கலைக்கழக நிர்வாகம் பதில் சொல்லியே தீர வேண்டும்'' என்றார் ஆவேசத்துடன்.

படங்கள்: ஆகாஷ்

www.TheMagnat.com



முத்துகிருஷ்ணன்

www.TheMagnat.com

சுவாமி வம்பானந்தா

# நெருப்பு வளையத்தில் தினகரன்!



தினகரன்

"ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, நிஜமாகவே ஒரு ராஜதந்திரி!" என ஆரம்பித்தார் வம்பானந்தா.

அது சீரியஸான கமென்டா? அல்லது கேலியா? எனப் புரியாமல் சிஷ்யை விழிக்க, வம்புவே தொடர்ந்தார்...

"மக்கள் நலக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராக இருந்து அதனை தோளில் தூக்கிச் சுமந்த வைகோ, 2016 சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு அந்த அணியில் இருந்து விலகினார். 'ம.ந.கூ. இனி தேற வாய்ப்பில்லை' என்கிற அவரின் கணிப்பு நிஜமாகி விடும்போல!" என்றார் வம்பு.

"ஆர்.கே.நகரில் மக்கள் நலக் கூட்டணி போட்டியிடும் என்று அறிவிப்பு வெளியிட்டார்களே?" என விழிகள் படபடக்க கேட்டார் சிஷ்யை.

"அந்த அறிவிப்பை வெளியிட்டவர், விடுதலை

www.TheMagnat.com



சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன்! மார்ச் 10-ம் தேதி சென்னை தி.நகரில் மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணனை சந்தித்துப் பேசிய பிறகு திருமா அப்படி அறிவிப்பு செய்தார். இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் முத்தரசன் அந்தக் கூட்டத்தில் பங்கேற்காததை அன்று பலரும் யதேச்சையான நிகழ்வாக எடுத்துக் கொண்டனர். ஆனால், அதில் புதைந்திருக்கும் உள் அரசியல் இப்போது வெளிவந்து கொண்டிருக்கிறது!"

"இந்திய கம்யூனிஸ்டின் நிலைப்பாடு என்ன?"

"மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் மார்க்சிஸ்டைவிட வெகு குறைவான தொகுதிகளில் போட்டியிடும் கட்சி இந்திய கம்யூனிஸ்ட்! தேசியக் கட்சி என்கிற அதன் அந்தஸ்தை தக்கவைக்க வேறு சில மாநிலங்களில் சொற்ப இடங்களையாவது ஜெயித்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் அந்த கட்சி இருக்கிறது. எனவே, தமிழகத்தில் மக்கள் நலக் கூட்டணியைத் தொடர வேண்டுமா? என சீரியசான விவாதம் இந்திய கம்யூனிஸ்டில் கிளம்பி விட்டது."



ஜி.ராமகிருஷ்ணன்



முத்தரசன்

"இவர்களுக்கு வேறு என்ன வழி?"

"இந்திய கம்யூனிஸ்ட் இப்படி தடுமாற்றத்தில் இருப்பதை தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் எப்படியோ மோப்பம் பிடித்தார். அதைத் தொடர்ந்தே மார்ச் 12-ம் தேதி நிருபர்களிடம் பேசிய ஸ்டாலின், ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் இடதுசாரிகள் தங்களை ஆதரிக்க வேண்டும் என வெளிப்படையாக வேண்டுகோள் வைத்தார். ம.ந.கூ.வை நோக்கி ஸ்டாலின் வீசிய இந்த 'கல்', இப்போது வேலை செய்ய ஆரம்பித்து விட்டது!"

"எப்படி?"

"இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய பெரும்பாலானவர்கள், 'மக்கள் நலக் கூட்டணி என்கிற அரசியல் மாற்றை நாம் முன்வைத்தோம். அதை மக்களே ஏற்கவில்லை. எனவே, மீண்டும் அதே பல்லக்கில் பயணிக்கத் தேவையில்லை. இந்த இடைத்தேர்தலில் நாம் எடுக்கும் நிலைப்பாடு, 2019 நாடாளுமன்ற தேர்தலில் நமக்கு ஓரிரு இடங்களை பெற்றுத் தருவதாக இருக்க வேண்டும்' என பேசினார்களாம்! இவர்களின் கருத்து, ஆர்.கே.நகரில் தி.மு.க.வை ஆதரிக்க வேண்டும் என்பதுதான்!"

"அ.தி.மு.க.வை ஏன் இவர்கள் பரிசீலிக்கவில்லை?"

"இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவரான தா.பாண்டியன் தரப்பில், அ.தி.மு.க. உறவை வற்புறுத்தியதாகத் தெரிகிறது. ஆனால் மெஜாரிட்டியான நிர்வாகிகள், 'அ.தி.மு.க.வின் அனைத்து அணிகளும் பா.ஜ.க. மேலிடத்தின் கண்ணசைவுகளுக்கு ஏற்ப தாளம் போடுகின்றன. எனவே, இந்த தருணத்தில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியை ஆதரிப்பதுதான் சரியானது' என கொள்கை முலாம் பூசியிருக்கிறார்கள். இது தொடர்பாக மீண்டும் மார்க்சிஸ்ட் கட்சியுடன் பேசுவது என்றும் மார்க்சிஸ்ட் உடன்படாத சூழலில் தி.மு.க.வை ஆதரிப்பது அல்லது தேர்தலை புறக்கணிப்பது என்கிற முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் வருமாம்."

"மார்க்சிஸ்ட் என்ன செய்ய போகிறது?"

"கடந்த தேர்தலில் வாக்கு கிடைக்கவில்லை என்கிற காரணத்திற்காக, அரசியல் நிலைப்பாட்டை மாற்றுவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்கிறாராம் ஜி.ராமகிருஷ்ணன். அதனால், மக்கள் நல கூட்டணியாகவோ அல்லது தனித்தோ மார்க்சிஸ்ட் கட்சியை ஆர்.கே.நகரில் களமிறக்கும் முடிவில் அவர்கள் இருக்கிறார்கள். இப்படி இடதுசாரிகளே தவளை - எலியாக ஆளுக்கொரு பக்கம் இழுப்பதால், திருமா நொந்து போயிருக்கிறார்!"

"திருமாவும் ஏதாவது 'பிளான்' வைத்திருப்பாரே?"

"இந்திய கம்யூனிஸ்டுடன் இணைந்து தி.மு.க.வை ஆதரிக்க திருமாவுக்கு ஆசைதான்! ஆனால் ஸ்டாலின் தனது பேட்டியில், மொத்த மக்கள் நலக் கூட்டணிக்கான அழைப்பாக



www.TheMagnat.com

## சுவாமி வம்பானந்தா

இல்லாமல் இடதுசாரிகளை மட்டும் அழைக்கிற விதமாக வார்த்தைகளை போட்டாராம். எனவே, 'அழையா விருந்தாளியாக நாம் ஏன் அங்கு செல்ல வேண்டும். அதைவிட அதி.மு.க.வையே ஆதரிக்கலாம்' என விடுதலைச் சிறுத்தைகளின் மாநில நிர்வாகிகள் பலரும் திருமாவை வலியுறுத்தியிருக்கிறார்கள். தி.மு.க.வை ஆதரிப்பது அல்லது தேர்தலை புறக்கணிப்பது என இந்திய கம்யூனிஸ்டை ஒட்டியே திருமாவின் நிலைப்பாடும் இருக்கிறதாம்."

"ஆர்.கே.நகரில் அ.தி.மு.க. வேட்பாளராக டி.டி.வி.தினகரன் களமிறங்க எடுத்த முடிவு கட்சிக்குள் சலசலப்பைக் கிளப்பியிருக்கிறதாமே?" என 'டாபிக்'கை மாற்றினார் சிஷ்யை.

"எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசு, இடைஞ்சலின்றி ஐந்து ஆண்டுகள் இயங்குவதை மட்டும் நோக்கமாக கொண்டு தினகரன் இயங்க வேண்டும் என்பதே சீனியர் கட்சிக்காரர்களின் விருப்பமாக இருக்கிறதாம். இந்தத் தருணத்தில் இடைத்தேர்தல் என்னும் நெருப்பு வளையத்தில் தினகரன் ஏன் போய் சிக்குகிறார்? என அவர்கள் ஆதங்கப்படுகிறார்கள்!"



திருமாவளவன்



எடப்பாடி பழனிச்சாமி

"அவர் களமிறங்குவதற்கு நியாயமான காரணங்கள் இல்லையா?"

"தினகரன் போட்டியிட முன்வந்ததற்கான காரணம், தனி கட்டுரையில் இருக்கிறது. ஆனால், இப்போது தேர்தலில் அவர் கவனம் செலுத்தினால், ஆட்சிக்கு ஆதரவாக எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கையை கூட்டுவதில் அவர் முயற்சி செலுத்த முடியாமல் போய்விடும் என்கிறார்கள். ஒருவேளை ஆர்.கே. நகரில் அவர் தோற்றால், ஆட்சியை தக்க வைப்பதில் மட்டுமல்லாமல் கட்சியைத் தக்க வைப்பதிலேயே சிரமங்களை உருவாக்கிவிடும் என்பதுதான் சீனியர்களின் கவலையாம்!"

"நெகடிவ்வாக ஏன் சிந்திக்க வேண்டும்?"

"அதீத நம்பிக்கையும் ஆபத்தானது என்பதுதான் சீனியர்களின் வாதம்! தவிர,

ஆஹா...

திரு



www.TheMagnat.com

# சசிகலாவுக்கு ஆபத்து?

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதன் மூலமாக முதல்வர் பதவியை நோக்கி தினகரன் காய்நகர்த்த ஆரம்பித்துவிட்டதாக தகவல்கள் பரவுகின்றன. இதுவும் சீனியர் அமைச்சர்கள் சிலரது பதற்றத்திற்கு காரணமாம்."

"முதல்வர் பதவி தனது நோக்கமில்லை என்றும் ஆர்.கே.நகரில் ஜெயலலிதா விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்வதுதான் தனது திட்டம் என்றும் தினகரன் தெளிவுபடுத்தியிருக்கிறாரே?"

"மார்ச் 15-ம் தேதி அ.தி.மு.க. ஆட்சிமன்ற குழு கூடி தினகரனை வேட்பாளராக தேர்வு செய்ததும் நிருபர்களுக்கு பேட்டி அளித்த தினகரன், 'எடப்பாடி பழனிச்சாமிதான் தொடர்ந்து முதல்வராக இருப்பார்' என ஒன்றுக்கு மூன்று முறை சொன்னார். ஆனால் கட்சியை வழிநடத்தும் துணை பொதுச்செயலாளரை வெறும் எம்.எல்.ஏ.வாகவோ அல்லது அமைச்சராகவோ வைத்துக்கொண்டு இன்னொருவர் முதல்வர் நாற்காலியில் அமர்வது சாத்தியமா? என்கிற கேள்வியை சீனியர்கள் சிலரே எழுப்புகிறார்கள். தவிர, தினகரன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்' நீங்கதான் முதல்வர் பதவியை ஏற்க வேண்டும்' என சிலர் குரல் எழுப்புவதைத் தவிர்க்க முடியாது. அது ஆட்சியின் ஸ்திரத்தன்மைக்கு இன்னும் இடைஞ்சலாகும் என்கிறார்கள் விவரமறிந்தவர்கள்!"



சசிகலா



பன்னீர்செல்வம்

"ஓ.பி.எஸ்.ஸின் டெல்லி பயணத்தின் ரிசல்ட் என்ன?"

"சசிகலா, அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுச்செயலாளர் ஆக்கப்பட்டதை எதிர்த்து கொடுத்த புகாரின் தொடர்ச்சியாக அபிடவிட் தாக்கல் செய்யவே டெல்லியில் தேர்தல் ஆணையத்திற்கு ஓ.பி.எஸ்.ஸும் அவரது சகாக்களும் சென்றார்கள். அப்போது ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னத்தை தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்கிற கோரிக்கையையும் இவர்கள் வைத்தார்களாம். ஆனால் மெஜாரிட்டி நிர்வாகிகள் சசிகலா அணியில் இருப்பதால், அதற்கு தேர்தல் ஆணையம் சம்மதிக்கவில்லை என்று தகவல்!"

"சசிகலா நியமனத்தில் ஓ.பி.எஸ். டீமுக்கு ஆதரவான உத்தரவு வரும் வாய்ப்பு இருப்பதாக கூறுகிறார்களே?"

"அ.தி.மு.க.வின் சட்டதிட்ட விதிகளில் இடைக்கால பொதுச்செயலாளர் பதவி

www.TheMagnat.com

Rep: 21-03-2017 KUMUDAM REPORTER Regd. No. TN/CCN/567/2015-2017 & WPP No. TN/PMG (CCR)/WPP-385/2015-2017.
RNI No. TNTAM/2001/04115. Day of Publishing : Every Tuesday & Friday.





சட்டமன்றத்திற்கு வந்த ஸ்டாலின்

பற்றி எதுவும் இல்லை. பொதுச்செயலாளர் பதவியில் காலியிடம் ஏற்பட்டால், அடிப்படை உறுப்பினர்கள் மூலமாகவே அடுத்த பொதுச்செயலாளரைத் தேர்வு செய்ய வேண்டும். அதுவரை முந்தைய பொதுச்செயலாளரால் நியமிக்கப்பட்டவர்களே கட்சியை வழிநடத்த வேண்டும் என கூறப்பட்டிருக்கிறது. தவிர, அ.தி.மு.க.வில் பதவிக்கு வருகிறவர்கள், தொடர்ந்து 5 ஆண்டுகள் கட்சியின் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும். இதில் விதிவிலக்கு கொடுக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு மட்டுமே உண்டு. இந்த இரு அம்சங்களின் அடிப்படையில் சசிகலா தேர்வுக்கு எதிரான உத்தரவை தேர்தல் ஆணையம் பிறப்பிக்கும் வாய்ப்பு இருப்பதாக ஓ.பி.எஸ். டீம் நம்பிக்கையுடன் கூறுகிறது!"

"சசிகலாவின் பதவிக்கே ஆபத்து என்றால், பெருங்குழப்பம் வருமே?"

"ஆமாம். சசிகலாவின் நியமனங்கள் எதுவும் செல்லாமல் போகும். டிடிவிதினகரனை கட்சியில் இணைத்தது, அவரை துணைப் பொதுச்செயலாளராக நியமனம் செய்தது உள்பட! அவரை கட்சியில் இணைத்ததே செல்லாது என்றால், ஆர்.கே.நகரில் அவர் அ.தி.மு.க. வேட்பாளர் ஆக முடியுமா? என்பதும் கேள்விக்குள்ளாகும். இது போன்ற திட்டங்களுடன்தான் வேட்பாளர் தேர்வைக்கூட ஒத்தி வைத்துவிட்டு ஓ.பி.எஸ். அணி டெல்லிக்கும் சென்னைக்குமாக பறந்து கொண்டிருக்கிறது."



தீபா

"ஒருவேளை ஆர்.கே.நகரில் தீபாவை ஆதரிப்பார்களா?"

"தீபா நேரில் வந்து ஆதரவு கேட்டிருந்தால், அதை பரிசீலிக்க ஓ.பி.எஸ். தயாராக இருந்தாராம். ஆனால், 'யாரிடமும் ஆதரவு கேட்க மாட்டேன். தி.மு.க. மற்றும் சசிகலா தரப்பு தவிர யார் ஆதரவு கொடுத்தாலும் ஏற்பேன்' என தீபா பொத்தாம்பொதுவாக சொன்னதில் ஓ.பி.எஸ். தரப்புக்கு வருத்தம். தவிர, முடிவுகளில் நிலையில்லாமல் இருக்கும் தீபாவை ஆதரிப்பது தங்கள் தரப்பு இமேஜை பாதிக்கும் என்பதும் ஓ.பி.எஸ். தரப்பு சீனியர்களின் கருத்தாம். எனவே, ஆர்.கே.நகரில் அறிமுகம் உள்ள உள்ளூர் வேட்பாளர் ஒருவரை எந்த நேரத்திலும் ஓ.பி.எஸ். அறிவிக்கக்கூடும்!" என்ற வம்பு,

"தமிழக சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர், மார்ச் 16-ம் தேதி தொடங்கியிருக்கிறது. கடந்த முறை நடந்த நிகழ்வுகளை மனதில் வைத்து கூடுதலாக குவிக்கப்பட்ட போலீசார், கூட்டம் தொடங்கும் முன்பே பத்திரிகையாளர்களிடம் மல்லுக்கட்டினர். எனவே, பட்ஜெட் தாக்கலை படம் பிடிப்பதை புறக்கணித்துவிட்டு, புகைப்படக்காரர்கள் நடத்திய வெளிநடப்புதான் முதல் செய்தி ஆனது. எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலினும் சட்டமன்றத்திற்கு வரும்போதே அந்த வளாகத்தில் நின்ற போலீஸ் அதிகாரிகளின் பெயர் விவரங்களை அவர்களிடமே விசாரித்தபடி வந்ததை பலரும் ஆச்சரியமாக பார்த்தனர்!" என கடைசி 'அப்டேட்'டை கூறிவிட்டு, சட்டமன்ற நிகழ்வுகள் தொடர்பான போன் தகவல்களுக்கு காது கொடுக்க ஆரம்பித்து விட்டார். ■



ஜெ. சமாதியில் பட்ஜெட் பெட்டியை வைத்து ஆசி வாங்கிய ஜெயக்குமார்